நீதிக் கிரங்கள்

R.
894.811.
17
EN

ஆசிரியர்கள் :

நாகராஜன்

செ. கதிரேசர்பிள்ளை

இ. அம்பிகைபாகன்

நா. ஆறுமுகம்

சி. ஆறுமுகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
1971
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEETIK. KARANKAL

நீதிக் கரங்கள்

(ஐவர் எழுதிய சிறுகாவியம்)

கவிஞர்கள் :

இ. நாகராஜன், செ. கதிரேசர்பிள்ளை, 'அம்பி',
நா. ஆறுமுகம், சி. ஆறுமுகம்.

பதிப்பாசிரியர் :

இரசிகமணி கனக. செந்திநாதன்

279115

279115

வெளியீடு :

யாழ். இலக்கிய வட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். இலக்கிய வட்ட வெளியீடு—3.
முதற் பதிப்பு: 19-9-66.

விற்பனை: தனலக்குமி புத்தகசாலை, சுன்னுகம்.
விலை: ரூபா 1-00

அச்சுப் பதிவு: ஸ்ரீ சண்முகநாத அச்சகம்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியீட்டுரை

நீதிக் கரங்கள் என்ற இச் சிறுகாவிய நூல் யாழ். இலக்கிய வட்டத்தின் மூன்றாவது வெளியீடாகும். ஏற்கெனவே 'யாழ்ப்பாணக் கதைகள்' என்ற சிறுகதைத் தொகுதியையும், சுருட்டுத் தொழில் சம்பந்தமான நூல் ஒன்றையும் வெளியிட்டுள்ளோம்.

யாழ்—இலக்கிய வட்டத்தின் பல நோக்கங்களில் நூல் வெளியீடும் ஒன்றாகும். அது தொடங்கிப் பத்து மாதங்கள்தான் ஆகின்றன என்றாலும் மூன்று நூல்களை வெளியிட்டதில் பெருமை கொள்கிறது.

'நீதிக் கரங்கள்' என்ற இக்கதை குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் முப்பதாவது வருடாந்த விழாவில் நடைபெற்ற கவியரங்கத்தில் பாடி அரங்கேற்றப்பட்டது. ஈழத்து இலக்கிய உலகிலே குறிப்பிடத்தக்க விமரிசகராகிய இரசிகமணி கனக. செந்திநாதன் இக்கவியரங்கத்திற்குப் பொறுப்பாக இருந்தபடியால் ஈழத்திலே இதுவரை நடைபெற்றிராத புதுமையாக இதை நடாத்தினார். வியாச பாரதத்திலுள்ள, அருமையான கதையொன்றைத் தேர்ந்தெடுத்து அதைப் பகுதி பகுதிகளாக வகுத்து ஐந்து கவிஞர்களிடம் கொடுத்துப் பாடச் செய்தார். (மத்தாப்பு என்ற குறுநாவலை அவர் அப்படி ஐந்து எழுத்தாளரைக் கொண்டு எழுதுவித்து வெளியிட்டுள்ளார்.) கவிஞர்கள் பாடிய பகுதிகளை அவ்வக் கவிஞர்கள் பாடும்பொழுதே சபையிலுள்ளோர் இரசிப்பதற்கு வசதியாகத் தனித்தனிக் காகிதங்களில் அச்சிட்டு வழங்கினார். இந்தப் புதுமுறையை எல்லாரும் வரவேற்றார்கள். உண்மையான கவிஞர்கள் தம் ஆற்றலைக் காட்ட இது வழி அமைப்பதாகவும் இருந்தது எனப் பலர் அபிப்பிராயப்பட்டார்கள். இது நடைபெற்று ஒரு வருடமாகிவிட்டது. ஆனால் அக்காவிய அரங்கிலே சமுகமளித்திருந்த பலர் இதை நூல் வடிவாக வெளியிட வேண்டும் என வற்புறுத்தினர்கள். அவர்களின் வற்புறுத்தலுக்கமையவும் இப்படியான கூட்டு முயற்சிகள் வெளிவந்தால் இதைப் பார்த்து இதனிலும் பெரிய காவியங்கள் வெளிவரலாம் என்னும் ஆசையினாலும் யாழ். இலக்கிய வட்டம் இதனை நூல் வடிவத்தில் தர முன்வந்துள்ளது.

இதற்காக, யாழ்—இலக்கிய வட்டத் தலைவர் இரசிகமணி கனக. செந்திநாதன் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகள் பல. அவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கும், இந்தச் சிறுகாவியத்தை அரங்கேற்றஞ் செய்தபொழுதே விமர்சித்த 'சு. வே.' அவர்கள், அதை எழுத்தில் எழுதி உபகரித் தமைக்காக அன்னருக்கும், இந்தக் காவியத்தை விமரிசனம் செய்த சிறந்த கவிஞரும் விமரிசகருமாகிய க. சச்சிதானந்தன் அவர்களுக் கும் யாழ்—இலக்கிய வட்டம் நன்றி செலுத்துகிறது. நீதிக் கரங்கள் என்ற இந்த நூலின் முகப்புப் படத்தை அருமையாக அமைத் துத் தந்த ஓவியர் கே. கே. வி. செல்லையா அவர்களுக்கும் எங்கள் நன்றியுரியதாகும்.

நா. சண்முகநாதன்,
காரியதரிசி,
யாழ்—இலக்கிய வட்டம்.

யாழ்ப்பாணம்,
18-9-66.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரும்பசிட்டி சன்மார்க்க சபையில்
10-7-65ல் நடைபெற்ற
'நீதிக் கரங்கள்' — கவியரங்கு

கவிஞர்கள்: *(இடமிருந்து வலமாக)* இ. நாகராசன், செ. கதிரேசர் பிள்ளை, இ. அம்பிகைபாகன், இரசிகமணி கனக. செந்திநாதன், நா. ஆறுமுகம், சி. ஆறுமுகம்.

UNIVERSITY OF CEYLON
1971
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரும்பசிட்டி, சன்மார்க்கசபையின்
30 - வது வருடாந்த விழாவையொட்டி 10 - 7 - 65-ல் நடைபெற்ற
முத்தமிழ் விழாவில்
நீதிக்கரங்கள் என்னும் இக் காவிய அரங்கிற்குத்
தலைமை தாங்கி
இரசிகமணி கனக. செந்திநாதன்
ஐந்து கவிஞர்களையும் அறிமுகப்படுத்திப் பாடிய

பாக்கள்

சரஸ்வதி துதி

கம்பனுக்கும் மாகவிஞன் காளிதா சன்தனக்கும்
அம்புவியிற் பாடல் அருள்மாதா — செம்பொருள்சேர்
வாக்கருளும் வாணியுனை வந்தித்தேன் என்தலைமைப்
பாக்களுக்கும் நீகடைக்கண் பார்.

தமிழ்த் தாய் வாழ்த்து

நல்ல இளங்கோ சிலம்போசை நவமாய்க் கேட்டே நீதவழ்ந்தாய்
நவைதீர் குறளைத் தேவர்தர நலமாய் உண்டே நீவளர்ந்தாய்
கல்லைக் கனியாய்ச் செயும்நால்வர் கவிஞர்மாலை பலவணிந்தார்
காலம்மறையாப்புராணமெனும் களிகொள் மலரைப் பலர்தந்தார்
எல்லை இல்லாக் கவிகம்பன் இராமாயணமாம் முடிபுனைந்தான்
இனிய சிங்கா தனம்தந்தே இருதாள் கவிபா ரதிபணிந்தான்
கல்லும் மண்ணும் தோன்றாத காலத் தக்கும் மூத்தவளே!
கணமும் இளமை குன்றாத கடவுட் தமிழே! நீவாழி!

ஈழகேசரி பொன்னையா துதி

அன்னைத் தமிழுக் கணி செய்யும்
ஆர்வ மூலத்தில் உருக்கொள்ள
முன்னைப் பெரியோன் காப்பியஞ்செய்
முழுநூ லதற்கும் உரைவிளக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப் பதித்து வெளியிட்டும்
தகைசேர் ஈழ கேசரியைப்
பொன்னைப் போலத் தந்துமொளிர்
பொன்னை யாதான் போற்றுவனே!

அரங்கப் பெயர் கொள் பொன்னுத்துரைக்குத் துதி

ஊர்கொண்ட தமிழ்நங்கை யிருகண்ணி லொன்றான
இலக்கணம் கரைகண்டவன்
இசைகொண்டு மாணுக்க ருளங்கொளக் கற்பிக்கு
மேற்றமிகு வித்துவானின்
சேர்கொண்ட சீடனாய் அந்நாளில் இவ்வூரில்
நிறைபுகழ் கண்ட புனிதன்
நேயமொடு சிறுவரின் கல்வியை வளர்த்தவன்
நெறியோவி யம்படைத்தோன்
கூர்கொண்ட நுண்மதியும் அஞ்சாமை யுங்கொண்டு
கொள்கைவழி தவறுமலே
கோதிலாச் சன்மார்க்க சபையினைத் தாபித்துக்
குறைவிலாத் தொண்டுசெய்தோன்
வேர்கொண்ட கொடிமுல்லை விகசித்த போதிலே
வீழ்ந்ததைப் போல் மறைந்தும்
வீசு புகழ் கொண்டபொன் னுக்குமரன் தாளினை
விருப்பொடும் வாழ்த்துவேனே

கற்பனையில் மிக்கஉளக் கவிஞர்காள், உங்களது
பொற்கரங்கள் வாழ்த்துகிறேன்! போது மலர்ந்ததுபோன்
சிற்சபையில் வீற்றிருந்து சிரக்கம்பஞ் செய்கின்ற
நற்பெரியீர், உம்மை நயமாய்ப் பணிகின்றேன்!
தற்பெருமை யல்ல, தகைசேர் கதைபெடுத்து
விற்பன்னரைக் கண்டு வேண்டும் பணியுரைத்து
அற்புதமாய் நற்கவியில் ஆக்குங்கள் என்றவுடன்
கற்பனையை யோட்டிக் கவிதைக் கடல்மூழ்கிச்
சொற்பொருளில் நல்ல சுவையில் மிகஇனிதாய்க்
கற்கண்டு போலக் கதையை முடித்துள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்து வருடமதாய்ப் பார்க்கும் விழாவெங்கும்
எத்தனையோ கவியரங்கம் எடுத்தார் தமிழ்த்தொண்டர்
அத்தனையும் மீறி அழியாமல் நின்றெங்கள்
சித்தத் திருக்கவல்ல சீர்சால கவியரங்கம்
“நீதிக் கரங்கள்” எனும் நிறைந்த கவிக்கதையை
நீதில் தமிழ்செய்த செம்மைப் புலவோர்கள்
வந்திங் கிருக்கின்றார் வளமார் தமிழ்ச்செல்வர்
எந்தன் செயலாக ஏற்றமிகு இச்சபையில்
இன்சொற் புலவர்களின் இயல்பை உமக்குணர்த்தும்
என்செயலைச் செய்தே இனிதாய் அமருகின்றேன்.

கவிஞர்: இ. நாகராஜன்

முன்னே அமர்ந்து முகம்மலரும் என்னினிய
கன்னல் நிகர்த்தமொழிக் கவிஞன் கருத்தினிலே
நின்றே இனிக்கின்ற நிலைகொள்ளும் நட்பாளன்
நன்றே வருக, இங்கு நாகரா ஜக்கவிஞ!

—(இவன்)

பாலர்க்கு வேண்டிய பாட்டுக்கள் நூற்றின்மேல்
பக்குவ மாகவே பாடித்தந்தான்
சாலச் சிறந்தன 'சட்டை'யும் 'காக்கை'யும்
தங்கும் இனிமைக் குயிற்'குரலும்'
கோலம் பலகொள்ளும் 'மத்தாப்பு' காவலின்
குழுவிலே என்னோ டெழுதியவன்
காலத்தை வென்றிடும் 'மணிமகுடத்தி'னில்
கவிதை நடையிலே வெற்றிபெற்றோன்.

ஈழத்துக் கேசரி பொன்னைய வள்ளலின்
ஈடிணை யற்றநற் பேரிதழில்
வாழத் தகுந்த சிறுகதை கட்டுரை
மாண்புடன் தந்து வளர்ந்த செல்வன்
வேளைவரத் தன தாற்றல் மிகப்பல
வேலையுடன் சில நாவல்களும்
ஆழமுடைக் கருத் தோடு தமிழினில்
ஆசைதீரப் பணி செய்துயர்ந்தோன்.

UNIVERSITY OF CEYLON 1971 LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் : சே. கதிரேசர்பிள்ளை

அவனைத் தொடர்ந்துகவி ஆக்கியித்தக் காவியத்தைத்
தவறேதும் இல்லாமல் தந்தகவி யாரென்றால்
அளவை நகர்பெற்ற அருமைப் பெரும்புலவன்
பழமையால் மேலுயர்ந்து பண்பார் கதிரேசன்

—(இவன்)

கவிதைதனில் தமிழினிமை ஊட்டி—பல
கவியரங்கில் சுவையினிமை காட்டி
அவையிலுளார் தம்மனத்தே ஆட—அவர்
அம்ம!என வியப்பிற் பாட
சுவைகொள் பல பாவியற்றும் ஆசான்—வெள்ளைச்
சுத்த மனம் கொண்டநல்ல சீமான்
மாவைநகர்க் கந்தன்வரு தேரைக்—கண்டு
மனதினிலே ஆசைகொள் சிறாரைப்
பாடிஎமைக் கொள்ளைகொண்ட கோமான்—சிறு
பாலர்களும் பாடவைத்த சீமான்
நல்லபல நாடகங்கள் ஆக்கி—இந்த
நாவினிலும் மாணவரை ஊக்கி
வல்லவர் பெருஞ்சபையிற் காட்டி—பல
வாகையொடு தம்புகழை ஈட்டி
தன்நிறைவு கொண்டதுணம் உள்ளோன்—தக்க
தானபுரா ணம்பலவும் கண்டோன்
அன்னவனைப் பாடஅழைக் கின்றேன்—இந்த
அவையிலுளீர், நலச்சுவை கொள்வீர்

கவிஞர் : அம்பி (இ. அம்பிகைபாகன்)

மூன்றா மிடமதனில் முன்னமர்ந்து தன்கவிதை
தேன்போ லினிக்கத் தெவிட்டாமற் சொல்லவந்த
"அம்பி"ப் புலவனிவன் அழகார் பெருங்கவிஞன்
நம்பிக்கை வையுங்கள் நயமாகப் பாடிடுவான்.

—(இவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏரார் தமிழ்த்தாய்க்கு ஏற்றம் பலகொடுக்கப்
போர்வத் தோடுவந்த பெட்பாளன் — ஆராமை
கொண்டுபல விஞ்ஞானக் கோட்பாடு பற்றிநல்ல
திண்மைபெறு கட்டுரைகள் தீட்டியவன் — முன்னாளில்
விஞ்ஞானத் தொண்டுசெய்த வீரகிறீன் பாதிரியார்
எஞ்ஞான்றும் வாழ எழுதியவன் — விஞ்சுபுகழ்
பாலர் விரும்பிப் படித்துக்கும் மாளபிட
ஏலவே பாட லியற்றியவன் — கோலமிகு
நற்சபையிற் பற்பலவாம் நாகரீகப் பொருளிற்
கற்றவர்கள் ஏற்றக் கவிதைகளை — அற்புதமாய்
வாசிக்கும் நண்பன் வளரம் பிகைபாகன்
வாசிப்பா னிக்கதையை வந்து.

கவிஞர் : நா. ஆறுமுகம்

அடுத்திங் கருங்கவிதை அழகுத் தமிழினிலே
தொடுத்தின்பஞ் சொட்டச் சொலவந்த நற்கவிஞன்
படித்த படிப்பையெலாம் பண்பாக வாழ்க்கையிலே
பிடித்துப் பெருமையுறும் போராறு முகப்பெயரோன்
—(இவன்)

செந்தமிழி லுள்ளபல சந்தம தெடுத்து
மூந்தையர்க ளாண்டமுறை முற்றவு முணர்ந்து
விந்தையிது வென்றுபலர் விம்மிட நயந்து
சிந்தையினி தாயகவி செய்தனன் உயர்ந்தோன்

இன்னமுத நற்குறளை எவ்வகையி லேனும்
நன்னார்சபை கேட்கவொரு நாள்முழுது மோதிப்
பொன்னெடு பதக்கமிலை பெற்றபுக ழாளன்
தன்சமய நன்னெறியைத் தாங்குபவ னாமே

வித்துவான் : சி. ஆறுமுகம்

இந்தக் கவிக்கதையை இனிதாய் முடித்துவைக்கும்
ஐந்தாம் கவிஞனம் ஆறுமுகன். புங்கைநகர்
தந்த பெரும்புலவன் தமிழூக் குழைத்திடுவோன்
சொந்தக் கனிவுடனே சொல்வான் கவிகேளீர்!
—(இவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்ணா மலைநகர்க் கல்லூரி தன்னி லமர்ந்து தமிழ்
கண்ணைப் படித்துப் பரிசோடு வாகை கவிஞனிவன்
தண்ணார் புகழீழ நாட்டுப்புலவர் தமிழ்மழையெல்லாம்
விண்ணாடு முட்ட முடிசூட்டி எங்கணும் விட்டவனே.

கந்த வரோதயக் கல்லூரி யாம்கழ கத்தமர்ந்து
புந்தி யினிக்கத் திருவைப் பயிற்றிப் பொலிவுபெற்றோன்
சிந்தை தெளியப் பிரசங்க மாமழைத் தேன்சொரிவோன்
எந்தக் கவியும் இவன்வாயிற் பட்டால் எழிலுறுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீதிக் கதைகள்

இ. நாகராசன்

காப்பு

விநாயகர் துதி

தேனூர் தமிழதனில் தீங்கவிதை செப்பிடமெய்ஞ்
ஞான நலத்தைநீ நல்குவாய் — ஆனைமுகா
சந்ததமும் நின்தாளே தஞ்சமென வந்தித்தோம்
வந்தெம்மைக் காப்பாய் மகிழ்ந்து.

கலைமகள் துதி

வாக்கருளும் வாணியுன்னை வாழ்த்தி மனத்தோடு
பூக்கள் பலசொரிந்து பூசித்தோம் — நோக்காலே
பாடுங் கவிதையிலே பண்பாய்க் கருத்தாக்கங்
கூடிடச்செய் உள்ளங் குளிர்ந்து.

தமிழ்த் தாய் வாழ்த்து

சங்கக் கடலில் நீராடிச்
சான்றோர் கருத்துப் பூச்சூடி
பொங்கும் புதுமைப் பொலிவோடு
புவனந் தன்னில் முன்தோன்றி
எங்கும் எல்லா அறிஞர்களும்
ஏற்றிப் போற்றும் எழிற்றமிழே
இங்கும் உன்னை இறைஞ்சுகிறேன்
இனிக்குங் கவிதை ஈவாயே!

அவையடக்கம்

நீதி யுரைக்கும் பலகதைகள்
நிதியாய்க் கோத்து வியாசமுனி
ஓதி உரைத்த பாரதத்தில்
ஒருமாக் கதையை விரித்துரைத்தோம்
சேர்தி முகத்துச் சிறுவர்சொலும்
சுவைசேர் மழலை மொழியெனவே
ஆதிப் புலவர் பொறுத்திடுவார்
அவையீர் குற்றம் பொறுப்பீரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனி கவர் படலம்

1. முன்னொரு காலந் தன்னில் முன்னவர் மொழிநீ திக்குப்
பின்னம தின்றிப் பீடும் பெருமையும் பெருகி யோங்கத்
தன்னிக ரில்லா னாகிச் சத்யமன் என்னும் மன்னன்
இந்நிலத் தோர்கள் போற்ற இனிமைசேர் ஆட்சி செய்தான்

2. பொய்யர்க ளில்லை வஞ்சப் புரட்டர்கள் திருடர் இல்லை
துய்யசீ லத்தைப் பேணும் துனியறு முனிவர், வீரர்,
வையகம் வாழ உண்டி வழங்கிடும் உழவர், பொல்லாப்
பொய்யிலா வணிகர், கற்றோர் பொலிந்தனர் மன்னன் நாட்டில்.

3. இல்லையென் றுரைப்பா ரின்றி இழிவுறு செயல்கள் நீக்கி
நல்லவை நாடிச் செய்யும் நல்லவர் மலிந்தார்; நாடிச்
செல்விருந் தோம்பி வீடு தேடியே வருவார்க் கீந்தார்
கல்வியுங் கவினும் மேலாங் கலைகளும் வளர்ந்த தங்கே.

4. எரியில் நிறைந்த நீரை இறைத்தவர் வயலிற் பாய்ச்சச்
சீருறச் செந்நெல் லோங்கும், செழுமையே சிறக்கும்; கையால்
வாரியே வழங்கி மற்றோர் வாழ்வினில் இனிமை கண்டு
நேரியல் நெறியில் நின்றோர் நித்தமும் அமைதி கண்டார்.

5. சீர்மலிந் தோங்கும் நாட்டைச் சேர்ந்ததோர் வனமொன் றுண்டு
பேருருக் கொண்ட மால்போற் பீடுற வளர்ந்து வானக்
கார்முகில் படிய நிற்கும் கவினுறு மலைமேல் ஆறு
சீருளத் தாயைப் போலத் திகழ்ந்திழிந் தோடா நிற்கும்.

6. மலையளி நதித்தாய் ஓடும் வளம்மலி கரைக்கு அப்பால்
நிலமகள் பசிய தான நிறத்துள ஆடை தாங்கி
அலகிலா அழகி னோடு ஆங்குறைந் தனளோ? சாந்தங்
குலவிடும் அடவி யொன்று குளிர்மையோ டிலங்கிற் றம்மா.

7. ஆண்டுகள் பலநூ றோடி அழிந்தொழிந் தகன்ற போதும்
நீண்டதாம் எமது வாழ்வு நீளுல கத்தார் போல
ஆண்டுநூ றடைவ தன்முன் அழிந்திடோம் என்று சாற்றி
வேண்டிய விழுது தாங்கி வியன்மிகு ஆல்கள் நிற்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. மானினங் குதித்து ஓடா மரையினம் வெருட்சி கொள்ளா
கானவர் குழல்கேட் டுள்ள கரியினம் அசையா, மேலாந்
தானவர் தாமும் வந்து தவஞ்செய மனமே கொள்வர்
ஈனமாஞ் செயல்கள் செய்ய இசைந்திடா ஒன்றும் அங்கே.

9. கிள்ளைகள் பறந்தே கூடிக் கீச்சிடும், செடியிற் பூத்த
கள்ளவிழ் மலரைத் தேடிக் கனிவுறக் காதல் பாடி
உள்ளமே வியக்க வண்டு ஒயிலுடன் பறக்கும், பள்ள
வெள்ளியே யன்ன நீரில் மீனினங் களித்துத் துள்ளும்.

10. ஓடிடும் ஆறே இன்ப ஒயிலுடன் சுதிதப் பாது
பாடிடும் பாட கன்தன் பண்ணொலி இசைத்து, கொம்பர்
கோடிய விருட்சக் கூட்டங் கொட்டிய மலரைச் சூடி
நாடியே நாட்டிற் கெல்லாம் நறும்புனல் பரப்பிச் செல்லும்.

11. மட்டிலா எழிலுஞ் சாந்தம் மன்னிய அமைப்பும் முத்தி
கிட்டிடச் செய்யும் நெஞ்சிற் கிளர்ந்தெழுந் தழிக்க வல்ல
கெட்டதீ வினைகள் தீர்த்துக் கீர்த்திசேர் தவமே கொள்ள
ஒட்டிய உடலோ டுள்ளத் துரமுடை இருவர் உண்டாம்.

12. பற்றினை அறுத்தோர், தெய்வ பத்தியிற் சிறந்தோர், வஞ்சம்
அற்றோர் மனத்தார் வாழ்வின் அருமையை அறிந்தே ஈண்டு
முற்றிய நியமத் தோடு முறைபிச காது நாடி
நற்றவம் புரிந்து வந்தார் நாட்டினில் நலமே ஓங்க.

13. இருவரும் ஒருதா யீன்ற இனியசோ தரர்கள் பன்னாள்
பெருவனத் திடையே சிவம் பேணியே பெம்மான் தன்னை
ஒருமனத் துடனே போற்றி ஓங்கிய தவமே செய்து
கருமமே கண்ணாய் நின்றார் கண்டவர் வியக்கும் வண்ணம்.

14. சங்கராம் அண்ணன் சால்புத் தம்பிபேர் லிகிதர் உள்ளம்
பொங்கிடு கோபங் காமம் புன்மைசேர் குரோதம் மோகம்
அங்கவர் உளத்தைத் தாக்கா ஆறினில் ஒழுகி என்றும்
மங்கல மனத்த ராகி வனத்தினில் உயர்ந்தே வாழ்ந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. தனித்தனி பன்ன சாலை சமைத்தனர் தமக்கே வேண்டும்
புனிதமாம் பொருள்கள் யாவும் பொருந்திட வைத்தார் யாக
வினையினைச் சரியாய் எந்த வேளையுஞ் செய்தார் என்றும்
இனிமையே குலவித் தெய்வ எண்ணமே நிலைக்கச் செய்தார்:

16. புலனது உணர்ச்சி நீத்துப் பொழுதெலாம் உளத்தின் தூய்மை
நிலவிடச் செய்தே ஞான நெறியிடை நிற்போர் தன்னால்
உலகமே உயரு மென்றே ஓதினர் உண்மை; நாடு
நலமெலாம் பொலிய எந்த நாளுமே சிறந்த தன்றே.

17. இந்நிலை தவறா இந்த இருடிகள் தம்மை என்றும்
மன்னவன் மதித்தான் வேளை வாய்த்திடும் போது எல்லாம்
அன்னவர்க் கான பூசை அமைவுறச் செய்து போற்றத்
தன்னிடம் விட்டு வந்தான் தர்மமே செழிக்க வைத்தான்.

18. ஓர்தினங் கங்குல் நீங்கி உடல்மெலி கிழவன் போலப்
பார்தனைத் திரும்பிப் பார்த்துப் பையவே நகருங் காலை
சீர்திகழ் அண்ணன் தன்னைத் தேடியே தொழுது போற்ற
பேர்பெறு லிகிதர் உள்ளப் பிரியமே கொண்டு வந்தார்.

19. அண்ணனவ் வமய மில்லை அவர்வரும் வரையுந் தங்க
எண்ணினர் தம்பி ஆங்கே எழில்நறுஞ் சோலை நின்றுந்
தண்ணெனத் தென்றல் வீசச் சால்புறு மனத்தி னோடு
வண்ணமார் காவி னுள்ள வனப்பினைப் பார்க்கத் தூண்டும்.

20. பற்றிலார் ஆயி னும்என்? பரமனார் படைத்து வைத்த
நற்றமிழ் நயங்கொள் சோலை நறுமலர் வெறுப்ப ராமோ?.
குற்றமில் அண்ணன் வாழும் கோதிலா இடத்தைச் சற்றுச்
சுற்றியே பார்க்கத் தம்பி துடிப்புடன் எழுந்து சென்றார்.

21. இன்னறுஞ் சுனைகள் இன்பம் இதுவெனக் காட்டும் ஏரி
தண்ணிழல் விரித்து வானைச் சார்ந்துள பரிதி நோக்கும்
வண்ணதா மரைகள் காவில் வனப்புறு தளிர்கள் பூக்கள்
பன்னரும் எழிலிற் கூடிப் பரமனின் வடிவாய்த் தோன்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. புள்ளினங் கீக்கீ யென்று பூங்கிளைக் கொம்பிற் குந்தி
உள்ளமே துளிர்க்கக் கத்தும் உதயநல் லொளியை ஏற்று
வெள்ளியாய் ஓடும் ஆற்று மேட்டிடை அணில்கள் கூடித்
துள்ளியே பாய்ந்து சென்று தொங்கிய கனிகள் பற்றும்.

23. ஆடின மயில்கள் கூடி, அருவியின் உறுமீனுக் காய்
நாடியே அருச்சுனன்தன் நற்றவ நிலையைக் காட்டி
வாடியே ஒற்றைக் காலில் வருந்திடக் கொக்கு நிற்கும்
பாடிடுங் குயிலின் ஓசை பாவலர் கவிதை யாகும்.

24. சுற்றியே விகிதர் வந்தார் சூரியன் மைய வானம்
உற்றனன் வெப்பத் தாலே உயிரினம் வெதும்புந் துன்பம்
முற்றிய வேளை அந்த முனிவருஞ் சோர்ந்தார் அங்கே
தெற்றெனத் தீம்ப ழங்கள் தெரிந்தன மரத்தின் கண்ணே.

25. காற்றிலே ஆடும் இன்பக் கனிகளின் வாசங் கூடும்
ஆற்றிலோ குளிர்ந்த நீர்தான் ஆடியே அசைந்து செல்லும்
கூற்றுவன் கொடுமை போலக் கொடும்பசி வயிற்றை வாட்டி
ஆற்றலை அழிக்கச் செய்யும் ஆங்கவர் என்ன செய்வார் ?

26. அண்ணனின் பன்ன சாலை அழகுடன் விளங்கு காவில்
உண்ணுதற் குவந்த தான ஒப்பிலாச் சுவைப்ப ழங்கள்
கண்ணெதிர் உண்டு இந்தக் காலமோ பசிக்கும் வேளை
எண்ணினர் பழங்கள் கொண்டு ஈடிலாப் பசியைப் போக்க.

27. சீலமாய் ஆற்றில் மூழ்கித் திளைத்தவர் குளித்தார் வந்தார்
ஆலமுண் டன்னான் வர்ன அமரரைக் காத்த கால
காலனைத் தொழுதார் தன்னின் கடன்மையை முடித்து மேலாம்
சோலையின் மரத்திற் றாங்குஞ் சுவைமிகு கனிகள் கொய்தார்.

28. பசியினைப் போக்க அந்தப் பரமனின் பத்த னாங்கே
சுசிமிகு கனிகள் தம்மைத் தூயதன் கரமேற் கொண்டு
அசைவுற வாயால் மெல்ல அமைதியாய்ப் புசித்தான் ஆங்கே
திசையுறு புகழான் அண்ணன் திருமுக மதனைக் கண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. முனி கோபப் படலம்

செ. கதிரேசர்பிள்ளை

1. சிரத்திலே யொளிர் செஞ்சடை முடியுடன் செறிந்து
நரைத்த தாடியும் நற்றவக் கோலமும் நயக்கக்
கருத்தி லேபரன் கழலடி கண்டுகண் டுவந்து
சிரித்த லால்மலர் திருமுகத் தேசுடன் திகழ்வோன்.

2. சங்க ராகிய பெயருடைத் தனிப்பெருந் தலைவன்
தங்கி ஆயிடைத் தவமுயல் கின்றதண் ணளியான்
பொங்கு மன்புறு விகிதரின் தமையனும் புனிதன்
அங்கு போந்துதன் அருந்தவச் சூழலை யடைந்தான்.

3. வந்த மாதவற் காண்டலும் வனத்துறு மான்கள்
முந்தி ஓடியம் முனிவரன் முன்புறச் சூழ்ந்த
தந்தம் அன்பினைக் காட்டிடத் தருத்தொறும் பறந்து
சிந்து நல்லிசைக் குரலினிற் தெளித்தன புட்கள்.

4. நண்ணி முன்வரு மானினத் தியல்பினை நயந்தும்
பண்ணி னார்த்திடு பறவையின் தொகுதியிற் பரிந்தும்
விண்ணி லோங்கிய வியனிழற் தருக்களை வியந்துங்
கண்ணி லேயருள் கனிந்திட முனிவரன் கடந்தான்.

5. வாச நன்மலர் சுமந்தயல் மரங்களிற் படர்ந்து
வீசு தென்றலில் ஆடுறும் மென்தளிர்க் கொடிகள்
பூசை செய்வன போன்மலர் சொரிந்திரு புறத்தும்
நேச மோடவன் தாளிணை தாழ்ந்துபின் நிமிர்ந்த

6. வாழை மாபலா மாதுளை ஆதிய மரங்கள்
தாழ நின்றருங் கனிகளைத் தந்தவற் பணிந்து
வாழி நீரெம தையரென் றிசைப்பன மான
நீளி ருங்கிளை தாழ்த்தியும் நிமிர்ந்தும் நின்றிடுமே.

7. இன்ன சூழலை நீங்கியவ் இருந்தவப் பெயரோன்
பன்ன சாலையின் பாங்கரி னெய்தினன் பரிந்தே
முன்னர் வந்திடும் மூத்தவன் முதன்மையைத் தெளிந்தான்
அன்ன வன்தனக் கிளவலாம் ஆங்கமர் விகிதன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. உரித்த வாழையின் கனியின அருகியும் பிளக்கச்
சிரிக்கும் நற்பலாச் சுளையுறு தீஞ்சுவைத் திறமும்
அருத்தி யோடுணர்ந் தருந்திடும் விகிதனுங் கெழுந்தான்
திருத்த மிக்கதன் தமையனின் திருவடி தொழற்கே.

9. பந்த பாசங்க ளறுத்துயர் தவநெறிப் பயின்று
சொந்த மென்பதோர் துடக்கினும் தோய்ந்தில னேனும்
அந்த வேளையில் விகிதனுங் கண்ணனை உணர்ந்தான்
இந்த வாறுசங் கருமவண் இளவலை இணைந்தான்.

10. பூர்வ நாள்களில் ஈன்றவ ரன்பினிற் பொருந்தி
ஆர்வ மாய்ப்பயின் றாடிய தன்மையும் அலைவும்
பாரி லேயிணை பிரிந்திடா தொழுகிய பாங்கும்
நேரில் இன்றுதான் நிகழ்வன எனஅவர் நினைத்தார்.

11. சென்னி மண்மிசைப் படிதரத் திருவடி மீதில்
மன்னி வீழ்ந்தனன் விகிதனும் மாமுனிப் பெரியோன்
அன்ன வன்றனை இருகரத் தாலெடுத் தணைத்தே
முன்ன வன்முறை நிகழ்த்தினன் சங்கராம் முதியோன்.

12. ஒருக ணத்தினில் உற்றவிந் நிகழ்ச்சியை உதறிப்
பெருகு மாதவப் பெரியரா தலினுடன் பிரிந்தே
அரிய மாமறைப் பொருள்முறை ஆய்ந்திட அமர்ந்தார்
விரியும் பாசவெவ் வினையினல் மெலிவரோ மேலோர்.

13. மாறி லாமனத் திருவரும் அமர்ந்துழி மருங்கே
சாறு பில்குறு கனிகளைக் காண்டலுஞ் சங்கர்
வேறு வேறிவை கொய்திவண் உண்டதார் விரைந்து
கூறு வாய்விகி தாவெனக் குறித்தனன் கோதித்தே.

14. அண்ண நின்திரு வடியிணை வணங்கவிங் களைந்தேன்
கண்ணில் நின்றனைக் காண்கிலேன் கனிமிகு சோலை
நண்ணி ஆங்குள காட்சியை நயந்தபோ திவற்றை
உண்ண லாமெனத் தமியனேன் பறித்தனன் உணர்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. என்று கூறிமுன் பணிந்திடும் விகிதரை இளையோய்
நன்று நன்றுநின் செயலெனச் சங்கரும் நகைத்தே
என்றன் உத்தர வின்றிவை பறித்தனை இதனால்
மன்று ளாருனைத் திருடனாய் மதிக்குநின் றனையே.

16. தமையன் இவ்வுரை பகர்தலுந் தம்பியாம் விகிதர்
இமையும் யான்தவ றிழைத்திலேன் இந்தநற் சோலை
எமதென் எண்ணமே கொண்டனன் ஏனெனில் நீதான்
அமைதி யண்ணனாம் ஆதலின் எனப்பதில் அளித்தான்.

17. சங்கர் கூறுவான் தம்பிநீ சாற்றிய மாற்றம்
பங்க மற்றதே யாயினும் பழங்களைப் பறிக்க
இங்கு யானுனக் கனுமதி வழங்கினேன் இல்லை
அங்கத் தன்மையாற் குற்றமே நின்செயல் அறிதி.

18. பொருளை வேண்டுவார் உடையவ ரிடஞ்சென்று புகன்றாங்
குரிமை பெற்றபின் கொள்ளலே உயர்வுடைத் தாகும்
அருமை யண்ணனே யாயினும் அன்னையே யெனினும்
பெருமை யன்றவர் பொருளினை மறைவினிற் பெறலே.

19. உன்னை முந்திய பிறனுக்கிப் பழங்களின் உரிமை
தன்ன தாக்கயான் அநுமதி தந்துளேன் என்றால்
அன்ன தோர்கிலாய் நீஅவை பறித்தனை யாகி
என்னை மாதுயர்ப் படுத்துதிங் கெய்துவை யலையோ.

20. கோட்டம் நின்னதே யாகலின் அண்ணநிற் சூழ்ந்து
கேட்டி லேன்கனி பறித்தது கீழ்மைதான் எனினும்
வாட்ட மேன்இதை நீபொறுத் திடுதியேல் வழக்கு
நாட்டு வாரெவர் என்றனன் விகிதராம் நல்லோன்.

21. வியந்த சங்கர்மேற் கூறுத லுற்றனன் விரைந்து
பயங் தவிர்ந்துநீ பழங்களைப் பறித்தனை எனினும்
உயர்ந்த தன்மையார் உத்தர வின்றிவை உஞற்றார்
செயுந்தொ ழிற்குநீ தண்டனை பெறுதலே சிறப்பாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22. தீங்கு யாவுக்கும் மூலமா யமைவது திருட்டே
ஈங்கு நாட்டினில் அச்செயல் புரிபவர் எவரும்
வீங்கு தம்புயம் இழப்பரென் ருெருவிதி விதித்தார்
ஓங்கு வேந்தர்சத் யுமன்என துணர்ந்தனை நீயே.

23. பொறுத்து யானுனை விடுதலிங் கெளிதது புரியின்
செறுத்து நின்றனை மயக்கிய ஆசையாம் தீங்கு
மறுத்தும் நின்வயின் வந்துமே விடுமென மறுத்தேன்
ஒறுத்தல் பெற்றுநீ மாசிதை ஒழித்தலே நலமாம்.

24. ஆசை யாலென தநுமதி யின்றியிங் கடைந்து
மாசி லாக்கனி பறித்தனை மற்றது திருட்டே
நீசெய் தீங்கினைச் சத்யுமன் னிடஞ்சென்று நிகழ்த்திப்
பேசு தண்டனை அவர்தரப் பெறுதலே பெருமை.

25. ஆத லாலுடன் செல்லுதி எனச்சங்கர் அருள
காத லாற்கனி அருந்திடு சிசிதருங் கருத்தில்
மோது மாசையால் இச்செயல் புரிந்தனன் முழுதும்
தீதென் றெண்ணினேன் அரசர்பாற் செல்வனென் றெழுந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. அரசவைப் படலம்

'அம்பி'

1. சென்றனன் பாதை நீளச் செய்தவ முணர்வி லோடித்
தென்றலென் றலசி யின்பந் தெளிபொருள் மனதி லூற
என்றென திழிவு நீங்கி இனமர மோங்கு மென்றே
நின்றிலன் நினைவி லுண்மை நெறிமுறை கனிந்த போகி.

2. வாலையில் வடித்த தூய்மை வளர்மர பணைக்குந் தாய்மை
வேலவன் கணையின் கூர்மை வெகுமதி நிதியில் மிக்கோன்
சோலைகள் தாண்டிச் சூழ்ந்து சொரிந்தடர் முல்லை தாண்டிப்
பாலையுந் தாண்டி மாலை பசுங்கதிர் மருதம் புக்கான்.

3. கருதூடற் கந்தை யென்றங் கடமையிற் கண்கள் நெஞ்சிற்
பெருகுதண் ணன்பு குன்றாப் பெருநிதி யின்பஞ் சேர்க்கப்
புரிதொழில் வளத்தி லோங்கிப் புதுநகை மலர்ந்த தென்ன
மருதமும் மாலைப் போழ்தும் மனதிலோர் கிளர்வை யூட்டும்.

வேறு

4. சலச லத்துச் சதிர் புரிந்துந் தாமி குந்த நிறைமணி
கலக லத்துக் கதிர் குலுங்கிக் களனி யெங்கும் பேரொலி
அலை புரண்டு மணி வருத்து மகங்க ளர்ந்த போதையிற்
பொலிபொ லியென் றளக் கலத்திற் போடு கின்ற தெதிரொலி.

5. போடு கின்ற வொலியி லோங்கிப் பொலியு முண்மை நெஞ்சிலே
பாடு கின்ற அருவி யாகிப் பரவ சத்தில் உருவாக்
கோடி யின்ப முள்ள நாட்டிற் கொள்கை வாழ்க வாழ்கவென்
றோடி யோடிக் கால்ந டந்தே ஊர்ம னைகள் தாண்டினன்.

6. ஊர்க டந்திவ் வுலக ளந்த உணர்வ ழுத்துஞ் சிந்தையன்
சீர்மி குந்து செல்வ மோங்கிச் செறிந் தொளிர்ந்த நெஞ்சினன்
பேர் மனைதன் வாயில் தாண்டிப் பேர வைக்கண் சென்றிறை
போர் புரிந்து வாகை சூடும் பெருமை யோடு கண்டனன்.

வேறு

7. கண்டவக் கணத்தி லன்பிற் காவலன் இதய நெக்கித்
தண்டமி ழருவி பாயும் தவமுனி வருகை யாலே
கொண்டநற் கருணை பொங்கக் கொலுவிருந் தரசு செய்தோன்
அண்டிநின் றறமு ரைத்த அவைமறந் தெழுந்து நின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. வருகநின் வரவி னைய வளர்மறை செறிக இங்குப்
பெருகுக வின்ப மெங்கும் பேரொளி புலர்க பொங்குந்
திருநிறைந் தொளிர்க தூய திருவிளக் கொளிர்க நெஞ்சில்
இருவினைப் புலனு நீங்கி இறைவழி தெளிக வென்றான்.

9. சொன்னவன் உணர்வி லொன்றிச் சுழித்தெழு திரைகள் நீங்கி
முன்னவன் உளமோ வன்றி முறைமுறை தழுவி நிற்கும்
பின்னவன் கருணை யோவிப் பெறற்கரும் பேறென் றாங்கு
கன்னலைப் பிழிந்த சாற்றிற் கனிதமிழ்ச் சுவையுஞ் சேர்த்தான்.

10. வளநிறை மனதின் செல்வ! வளர்மதிச் சால்பு கொண்டுன்
உளநிறைந் தணைந்த தெண்ணம் உவந்தளித் தனன்என் றெண்ணித்
தெளிந்துரைத் தருள்க தூய திருவுளக் கருத்தை யென்றே
மொழிந்தனன் அமுதஞ் சொட்டும் மொழியுடைப் பாங்கு
மிக்கோன்.

11. உயிர்நிலை யாகி வாழ்வின் உயர்வினுக் குணவுமாகும்
பயிலுமின் னன்பெங் கையப் பயனில தாகும் வன்சொல்
செயுமதி கார மெங்கே சேர்ந்திவை புதுமை காட்டித்
தயிருறை வெண்ணெ யாகுந் தனிமா புனக்குண் டன்றே.

12. உன்னரு மொழியி லன்பின் உறவதி கார மாகிப்
பன்னரு மினிமை கொண்டே பாய்வதற் கிணையெங் குண்டோ
பொன்பொருள் வேண்டி யிங்குப் போந்தனன் இல்லை மன்னர்
மன்னவ! நீதி காக்க மனத்திடைக் கொண்டு வந்தேன்.

வேறு

13. வாழ்வி னின்னிசை யின்றென திச்சையால்
வசை படிந்தவோர் புன்னிசை யானது
நாளெ லாந்தவஞ் செய்திடும் முன்னவன்
நலமி குந்தநற் சோலையி லேகனி
ஆளு மென்மனக் கண்கவர்ந் தீர்த்ததால்
அவன்றன் உத்தர வின்றிப் பறித்தனன்
நீள் தவத்தினன் நின்னரை சென்றுடன்
நீதி நூல்வழி நில்லெனக் கூறினன்.

UNIVERSITY OF CEYLON 1971 LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14. நாட்டி லேதிருட் டாட்சி புரிந்ததும்
நல்ல வர்பொருள் கொள்ளையிற் போனதும்
ஓட்டி மீட்டுமின் னூடுபொன் நாடென
ஒப்பி லாதசெங் கோன்முறை செய்தவ!
எட்டி லேபொறித் துள்ளவர் நீதியை
என்றுஞ் செய்திலெ வாய்ப்பிலெ யாதலால்
கூட்டி யேவிதி தன்கைக் கருவியாய்க்
கொண்டு வந்தெனை உன்கையில் விட்டதே.

15. போர் முரசொலி யார்க்குமுன் சிந்தையிற்
பொருந்தி நில்லினை வோட்டுதி யோட்டுதி
பார் புகழ்ந்துனை யேற்றவும் போற்றவும்
பரணி பாடிநின் றுளவு மீளுதி
வேர றுத்தறம் வீழர சோச்சினல்
வேகும் நெஞ்சுன தாட்சியை வீழ்த்துமாய்
சீர்ம லிந்திடு நீதியில் நின்றுநீ
செம்மை சேர்அறம் நாட்டுதி நாட்டுதி.

16. ஆதி யந்தமில் லானருள் அவ்வழி
அன்பி லேயறன் வாழுமந் நல்வழி
சோதி யாய்ச்சுட ராய்ப்பெரு முள்ளொளி
தோன்றி நெஞ்சிலோர் சாந்த நிலாவொளி
நீதி யால்நிலெ பெற்றுயிர் வாழ்வதால்
நின்றிங் காண்டுயர் நீள்புகழ் எய்தவுஞ்
சீத நற்புன லாயகங் கொண்டுடன்
சீர்க ளோங்கவுஞ் செய்குதி என்றனன்.

வேறு

17. என்றலு முள்ளெம் முந்தே எதுவற மென்று காண
அன்றவன் அடியு மன்பு முடியையுந் தேடி ஞேர்போற்
சென்றலெந் துலெந்து மீண்டு தெளிநிலெ வலெகள் நீந்தி
ஓன்றிநின் றுளத்தில் வாழ்ந்த உயர்பொருள் உணர்ந்த தம்மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18. சிரிக்கு மென்மலரை நெஞ்சிற் சிவமுறை தலத்தை யன்பிற்
பொரிக்குமின் நினைவை யன்றிப் பொருளொது மறிந்தி லாளே
அரக்கர்முன் ஒளிர்ந்து மீண்ட வறக்குலத் திலகந் தன்னை
உருக்கினன் இராம னென்றால் உளக்கறை யுடைய ளாமோ?

19. உலகினை யுடைமை யாக்கி உடைமையின் உயிரு மாகிப்
பொலிவுறு செயல்கள் தாமே பொழுதெலாம் புரியு மன்னன்
கொலைபுரி வேடன் கையிற் கொடுத்திடத் தசையி லாமற்
கலையுடற் றசையைத் தாமே கனித்தளித் தனனே, என்னே.

20. சிந்தையிற் றூய்மை வாழ்வின் செயல்களிற் றூய்மை நெஞ்சில்
உந்திமுன் னெழுந்து நாவில் உதிர்சொலிற் றூய்மை கொண்டே
தந்திரு தவமென் றேத்தித் தனியுயர் வடையுஞ் சான்றோர்
சொந்தநல வாழ்விற் றியாகஞ் செய்துயிர் பெறுதல் வேண்டும்.

21. தங்கமே யெனினும் வேகுந் தணலிடை யுருகி மீண்டாற்
பொங்குபுத் தொளிபெற் றோங்கு புதுநகை புரியு மன்றோ
பங்கமில் லுண்மை யிந்தப் பாரினில் உளதோ வென்றே
அங்கமும் அகமு மெல்லாம் அவனிழந் திருந்த காலை.

22. துவிமன வினைகள் நீங்கித் துப்புர வொறுத்த லின்றி
இவறியின் கனிகொய் தின்றே இம்மையி லிழிந்த தாலே
தவந்தவத் தார்க்கு மற்றோர் தவஞ்செய முனைத லென்றும்
அவமென அவனி தூற்றும் அழிபிளி வரவு கொண்டேன்.

23. படைகளைம் புலன டக்கிப் பணிமனை யமைத்த நாளாய்
உடம்பினை நோக்க லின்றி உயிர்க் குயிர் தேடுமுள்ளம்
கடன்மறந் துடலை நோக்கிக் களவுள மாயிற் றென்றால்
உடன்பிறந் தவன்சொத் தேனும் உறுகள வாகு மென்றே.

24. ஓர்ந்துகண் ணோட லுந்தன் உயிர்நிலைக் கழகி லையு!
சுூர்ந்து நல் லறன் றெளிந்து கொள்கையின் றிறனு ணர்ந்து
தேர்ந்தருள் புரிக வுந்தன் திருமிகு சில மென்றே
தீர்ந்தநன் முடிவை நோக்கித் தவமகன் தேற்றி நின்றான்.

25. ஆலமுண் டகிலங் காத்த அவனுளங் கொண்ட சான்றோர்
ஞாலமெங் கணுமே யுண்மை ஞாயிறென் றொளிர்வர் அன்னார்
சீலமுந் திருவு மின்பத் திருவருட் பேறே யென்று
கோலநன் னகை அணிந்த கோமகன் விடைப கர்ந்தான்.

4. தண்டனை யுறுபடலம்

தெல்லியூர் நா. ஆறுமுகம்

1\. ஆன்றபுலன் வழியடக்கி ஆர்வஞ் செற்றே
ஐயமகன் றெருளிவிளக்கால் அவனி நோக்கி
ஊன்றிரிந்துந் திரியாத உறுதி கொண்ட
உத்தமநற் றவப்பெரியீர் உள்ளந் தன்னில்
ஈன்றபெருந் தாயினுஞ்சி றன்பு தாங்கி
இன்பமிகும் அரசாட்சி இனிதே யாற்ற
என்ற துணை மூத்தோரும் நீரும் ஆற்றும்
எண்ணரிய தவமல்லால் வேறு முண்டோ?

2\. நாட்டினிலே தவம்புரிவார் ஞானம் நல்க
நல்லறங்கள் தழைப்பதனுல் நாம்வாழ் கின்றோம்
நாட்டினிலே நீதிமுறை நிலைத்த லாலே
நல்லுணர்வோர் வளம்பெருக்கி யுய்வு பெற்றார்,
நாட்டினிலே மழைபொழிந்து வானம் நல்க
நற்குடிகள் இன்பத்தில் மூழ்கு கின்றார்
நாட்டினிலே உம்பெருமை தன்னைக் காண
நாடுபொரு ளிவையன்றி வேறொன் றில்லை.

3\. "மன்னவற்கும் மனுநெறிக்கும் தீங்குண் டாக
மாநிலத்தோர் புரிகுவரேல் அன்னார் தம்மை
முன்னிறுத்திக் தண்டனைசெய் உரிமை போல
மூதறிவர் உளந்திருந்தத் தயவு காட்டி
நன்னிலையில் வைத்திடற்கும் உரிமை உண்டே"
நாடுமுயர் இவ்விதியால் நானின் றும்மை
சொன்னமுறை தண்டிக்கத் துணிய மாட்டேன்
துணைபுரிவார் தமையொறுத்தல் தூய்மை யாமோ?

4\. தவமுனிவ! தருமநெறி அரசு தாங்கத்
தக்கதுணை யாயிருக்குஞ் சான்றீர்! நீவிர்
அவநெறியிற் பிறர்பொருளைக் கவர்ந்தீ ரென்றே
அணுவளவும் நான்கருதேன் அகிலந் தன்னிற்
பவமகற்றும் திருநெறியீர்! பரிவு கொள்ளும்
பான்மைமிக வேறேதும் வேண்டு மென்றால்
உவகையுறச் செய்திடுவேன் அடியேன் வார்த்தை
உள்ளமதிற் கொண்டுயச் செய்வீ ரென்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

5. என்று மன்னன் இயம்பிய போதினில்
ஏதி வன்சொல்? இதுமுறை யல்லவே
நன்று நன்றிவன் நம்மை விரும்பியே
நாடு நீதி தவறி யுரைதகனன்
கன்று வெஞ்சினத் தோடு முதுதவன்
கழலும் வார்த்தையும் காவலன் வார்த்தையும்
ஒன்றுக் கொன்று முரண்பட லானதே
யுண்மை நீதி நிறுத்துதல் என்கடன்.

6. நீதி மாறிடு மன்னனை நேர்வழி
நிற்க வைத்திடு வேனென் றுளங்கொளா
ஆதி நூல்மனு வாசகம் நெஞ்சினில்
ஆய்ந் துணர்ந்தவன் மன்னவ! நீசொலும்
சூதி லாதகல் வார்தகை விளக்கொளி
சூழ்ந் திருக்க வதன்நடு வேயிருள்
பேதி யாதும றைந்திடல் ஒத்ததே
பின்ன முற்றறம் பேண மறந்தனை

7. நம்மவர் பிறர் நற்றுணை வர்என
நாடி நீதி தவறி வழங்கிடின்
எம்மு னோர்வளர்த் திட்ட மனுநெறி
ஏத முற்றிடும் அன்றியும் சீர்மிகு
இம்மை யோடு மறுமை யின்பங்களை
என்றும் மானிடர் கைவிட லாகிடும்
அம்மை பாதி யுகந்தவன் நீதியாய்
அவனி யெங்கும் அருளுவ னல்லனே.

8. விகித னுக்கொரு நீதி பிறர்க்கொரு
நீதி செய்தவன் நீயெனப் பிற்றைநாள்
மகித லத்தினில் மாசுனக் கெய்திட
மன்ன, வாழ்வதை நீஅழிக் கின்றனை
தகுமு றைப்படி கைகளை வெட்டியே
தண்ட னைபுரி வாயெனில் உன்னையும்
அகில லோகம் புகழ்ந்திடும் என்னையும்
ஆக்கு நீரா கத்திடை மீட்குமே.

279115

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

9. என்றுகொண் டந்த முனிவரன் உரைப்ப
இருசெவி கைப்பஉள் வருந்தி
கன்றிய மனத்த னாகியே சத்யமன்
கடும்புணில் வேல்நுழைந் ததுபோல்
வன்திறல் முனிவ! வார்த்தையை மீறி
மாற்றம துரைக்கிலேன் எனினும்
புன்சொலுங் கேட்டுப் பொறுத்திடல் வேண்டும்
புரிந்திட வேண்டும்என் றிரந்தான்.

10. தவமது செய்து தரணியைக் காக்கத்
தக்கநற் கைகளே வேண்டும்
அவமது போக்கி யாகங்கள் ஆற்ற
அருந்திறற் கரங்களே வேண்டும்
துவாறு உடைகள் உடுத்திடக் கனிகள்
துய்த்திடக் கைகள்வேண் டாமா?
சிவன்தரு கரத்தைச் சிறியவோர் பிழைக்காய்ச்
சீவர்கள் குறைப்பது முறையா?

11. கரமதை இழந்து காட்டிடைப் புகுந்து
கால்வழி திரிந்திடும் போது
பெருவர முனிவர் உமையிடைக் கண்டு
பெற்றவிக் தண்டனை தனக்கு
உரியவே துக்கள் எவையெனக் கேட்டு
உசாவிடும் போதுநீர் கூறும்
சிறியஇக் கனிகொள் சம்பவங் கேட்டாற்
சிரிப்பரோ? அழுவரோ? தெரியீர்.

12. ஆதலால் இன்னும் அமைவுற மனத்தை
ஆற்றிநீர் சிந்தனை செய்தாற்
காதலாற் கனிகொள் சம்பவம் அதற்குக்
கரமதை இழப்பது பிழையென்
றோதிடும் எந்தன் கருத்துமே விளங்கும்
உத்தம! ஓர்ந்திடல் முறையே
வாதுசெய் திட்டேன் என்றுஉம் மனத்தில்
வருத்தமே கொள்ளிடல் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

13. என்று கூறி இரங்கிடும் மன்னனை
நன்று நன்றென ஞானியும் நோக்கியே
உன்றன் மாற்றம தோர்ந்தனன் நீதியை
இன்று கூறுதல் எங்கட் கெளியதோ.

14. அண்ணன் கூறிய நீதி யதுவன்றி
எண்ணக் கூடிய தெங்கணு மில்லையால்
மண்ணில் வாழ்பவர் நீதி யெமக்கன்று
திண்ண மாகவித் திக்கரம் போக்கென்றார்.

வேறு

15. முனிவரர் ஏறே! சொன்ன முறையினிற் கரத்தை நீக்கி
இனிதுற மீண்டும் உம்பால் ஈந்தனன் என்றே கொள்கத்
துனியுறு துறவோர்க் கீதல் தொன்முறை அரசர்க் குண்டே
புனிதமாம் கரத்தைப் பெற்றீர் புறப்படல் செய்க என்றான்.

16. கரங்களை இழந்தி டாது கடுவனம் சென்றால் மூத்தோன்
உரமுடை மனமி லாது உறுவழி பாதி சென்று
திரும்பியே விட்டாய் என்று தீக்கனல் சொரிவான் இந்தப்
பெரும்பழி எனக்கு வேண்டாம் பிரித்திடு கரத்தை என்றார்.

17. மன்னவன் நடுக்க முற்றான் மத்தினைக் கடைவார் கைபோற்
தன்னிலை அடையானாகித் தயங்கினன்; உளந்துணிந்தான்
என்னரும் இறையே, நீதி இயற்றுவேன் சிறிதும் மாழ்கேன்
உன்னரும் மொழியுட் கொண்டேன் உய்ந்தனன் அடியேன்
என்றான்.

18. தண்டனை புரிவார் தம்மைத் தருவித்து லிகிதரின்கை
துண்டிடும் நீதி குன்றா வகையெனத் துணிந்து சொல்லி
பண்டைநல் அறவோர் சென்ற பாதையிற் சென்றான் மன்னன்
அண்டரும் வியந்து போற்ற ஆங்கவர் கரந்துணித்தார்.

வேறு

19. மாநில மன்னவன் நீதி பிழைத்திடில்
மாதுயர் தேங்கி விடும்
கோணிலை மாறிநல் லின்ப மறைந்திடக்
கூரிருள் சூழ்ந்துவிடும்
நானிலை வேதமும் ஆகம முந்தரு
ஞானம் மறைந்து விடும்
வானில மோடுறு வானவர் தம்மருள்
வண்மை சுருங்கிடுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20. ஆதலின் மன்னர் அருஞ்செயல் செய்திட
ஆன்றவர் நாட்டினி லே
தீத கலத்தகு நன்முறை யோங்கிடத்
தேவர் உவந்திட வே
வேதமும் வேள்வியும் மல்கி விளங்கிட
வேண்டு வாம்பெற வே
நீதி நிறுத்துதல் நற்றவ மாந்தர்
நினைத்திட வேண்டுவ தே.

21. இருபுய மற்றிட உதிரம் பெருகிட
இன்ப முறும் விகிதன்
வருமுயர் வுன்னு மனத்தொடு யாதொரு
வாதனை யற்ற வனுப்
பெருகு முணர்வுறு முன்னவன் சொல்லினைப்
பேணினன் வாழ்ந்தனன் என்
றருகுறு காடு அடைந்து மகிழ்வொடு
ஆறி நடந்தன னே.

வேறு

22. கண்டன மான்கள் புட்கள் கனிவுறு துறவி யின்கை
துண்டிடச் சொரிந்த ரத்தச் சுவடினைக் கண்டே துன்பம்
கொண்டன கண்கள் கண்ணீர் குபுகுபு வெனவே பாய
அண்டையிற் சென்று பார்த்து அழுதன நாமென் சொல்வாம்.

23. ஓங்கிய விருட்ச மெல்லாம் உத்தமன் செயலைக் கண்டு
பாங்குற மலர்கள் தம்மைப் பாதையிற் றூவி வாழ்த்த
தீங்கனிச் சோலை யூடு சிலுசிலு வெனவே தென்றல்
ஆங்கவன் மேனி தொட்டு அசைவுற வீசிற் றம்மா.

24. கிள்ளைகள் குயில்கள் எல்லாம் கிளர்ந்தொலி பரப்பி அன்னோன்
உள்ளமே களிக்கச் செய்ய, ஊர்ந்திடும் ஓடைத் தண்ணீர்
மெள்ளவே அசைந்த சைந்து மேலவன் தம்மைத் தொட்டு
அள்ளியே புனித மாக்க ஆனகை யிலைஎன் றேங்கும்.

வேறு

25. இன்னவகை விகிதரு மிசைந்தமலை தாண்டிப்
பன்னரிய காடுமிடை பாலைநிலம் எல்லாம்
பின்னடைய வேகமொடு பெட்புற நடந்தே
முன்னவ னிருந்த தலம் மொய்ம்புற வடைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. கரம்பெறு படலம்

வித்துவான் சி. ஆறுமுகன்

1. சிந்தித்துப் பாராதே செய்தபிழை
        சிறிதெனினும் சீர்சால் நீதி
சொந்தநதால் உடன் பிறப்பால் தொன்மைநிலை
        சோராதே சுடரும் வண்ணம்
புந்திகொண்ட அண்ணனுரை பொன்னுரையாய்
        அரசன்முன் போந்து தண்டம்
சிந்தைமகிழ் வுடன் பெற்றுத் திரும்பிவரு
        லிகிதர்நிலை சிறிது சொல்வாம்.

2. பன்னரிய கரமிரண்டும் அறுபட்டே
        பசுங்குருதி பாயப் பாயத்
தன்னரிய தமையனார் சங்கர் முனம்
        தாழ்ந்திறைஞ்சி நிகழ்ந்த தன்மை
பன்னி நின்ற இளையோனும் லிகிதர்முகம்
        பார்த்துளத்தின் உயர்ந்த பண்பால்
என்னிளையோய் இருவீரும் இருநிலத்திற்
        பிறந்தபயன் இன்றே பெற்றோம்.

3. என்றுரைத்துத் தன்னிளவல் இனியமுகம்
        நோக்கியன்பு எழுந்து பொங்கக்
குன்றனையாய்! இதோவருகில் குதித்தோடும்
        ஆற்றிடைநீ குதித்தே யாடி
நன்றுநினைந் துயர்தெய்வம், நற்பிதிரர்
        தருப்பணமும் நவையின் றாற்றி
ஒன்றியமெய்ப் புனிதமெலாம் உற்றிடுதி
        என்றுரைத்தான் உண்மை யண்ணல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அண்ணனுரை செவிபுகலும் அருங்கரங்கள்
அறுபட்டோன் ஆற்றில் ஆடி
எண்ணியெண்ணி இருகரத்தால் இனியதருப்
பணமியற்றல் எங்ஙன் என்றே
புண்ணியனும் விகிதனவன் புந்தி கொளான்
புனிதநதி தன்னுள் மூழ்கிக்
கண்விழித்துத் தலைதூக்கக் கரமிரண்டும்
முன்தூங்குங் காட்சி கண்டான்.

5. முறைசிறிதும் மாறாத முன்னவனார்
பணியேற்று மூழ்குந் தம்பி
மறையோதித் தலைதூக்க வான்கரங்கள்
வளர்மாட்சி மாயம் என்னே!
துறைமோதும் புனலாறும் தூய்மைமிகு
கைகொடுத்த நதியாம் தொல்பேர்
நிறைவுடனே பெற்றதெனில் நீதியறம்
சார்ந்தவர்க்கும் நிகரோன் றுண்டோ!

வேறு

6. பாயு மாற்றினில் தோய்ந்த பழங்கரம்
மேயி னன்லிகி தப்பெயர் மெய்யினன்
சாயு மாயினும் ஊனுடல் சாலவும்
தூய தென்றுநன் னீதி தொடர்தலே.

7. கனிகள் ஆய்ந்து கவர்ந்த கரங்களைத்
துணிதல் தொன்முறை என்று துணிப்பித்த
முனிவன் முற்கரம் ஈந்தது முன்னவன்
மனித நீதியின் மாண்பன்றோ மாந்தர்காள்!

8. ஐயன் வாக்குக்(கு) அமைந்தவேள் தம்பியும்
துய்ய மாநதி ஆடித் தருப்பணம்
செய்து நன்கு முடித்துத் திரும்பினன்
தெய்வத் தேசு திகழவே அண்ணன்முன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

9. சென்றே யண்ணன் திருவடி வீழ்ந்துமே
ஒன்றும் அன்பினில் உன்னி வணங்கிய
தன்றி ருத்தம்பி சால்புந் தருமமும்
நின்று நின்று நினைந்தனன் சங்கரும்.

10. குற்ற மோசிறி தென்னினுங் கூறிய
சொற்ற வறிடாத் தூய லிகிதனுர்
பெற்ற கைகள் தவத்தின் பெருமையால்
உற்ற வோநல்ல நீதியின் உற்றவோ!

11. தாயர் தந்தையர் தம்மவர்க் கோர்நீதி
சேய்மை யாளர் செறுநர்க்(கு) ஓர்நீதி
மாய நீதி மலைக்கும் உலகமே
ஆயு மோஇவர் ஆற்றிய நீதியை.

12. தன்ன டிதொழுந் தம்பியை நோக்கியே
மன்னும் நல்லுரை ஒன்றுண்டு மாண்பினேய்
மன்னர் வாளிலே வெட்டுண்ட நின்கரம்
துன்னித் தோன்றிடச் சொல்தவம் பூண்டுளேன்.

13. குற்றஞ் செய்தவர் தண்டனை கொண்டிடின்
சற்றுச் சிந்தித்துத் தம்முன் அழுக்கெலாம்
முற்றும் நீங்கும் முறைமையுண் டாகுமால்
உற்ற நீதி உணர்த்தவே உன்னினேன்.

14. ஆக லின்மனு வண்ணல் தரும நூல்
ஓதும் அந்நெறி யுற்றெனை யுற்றனை
சாதல் நேரினுந் தக்கோர் நடுநிலை
பாதுகாப் பரிப் பாரகம் உய்யவே.

15. மனுவின் நல்லற மாண்புகள் கண்டவர்
மனித நீதி மதித்துமே வாழ்வரால்
புனித நீதியைப் போற்றில ராயிடின்
இனிய நல்லறம் எங்ஙனம் வாழுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு

16. என்று கூறிய சங்கரும் பின்னரும் இளையோய்!
ஒன்று கூறுவன் உளத்தினில் இருத்துதி உண்மை
இன்றுதொட் டிந்த இளமரக் காவுநீங் குள்ள
துன்று நற்செடி கொடியெலாம் நின்னவே சுகிப்பாய்!

17. விரும்பும் வண்ணம்நீ மென்சுவை இன்சுவைக் கனிகள்
கரும்பும் கட்டியும் என்னவே உண்டுநீ களிப்பாய்
திரும்பு நாற்றிசை காணுயிர்க் குலமெலாந் திகழ
வரும்ப யனளித் தின்பமே வாழுதி மாதோ!

18. பகைவர் நண்பினர்; பண்புளார் பண்பிலர்; பாரில்
வெகுத வத்தினர் அவத்தினர்; மேலவர் கீழோர்
தகுதி ருவினர் இரவலர் என்றொரு பக்கம்
புகுமி யல்பிலா நீதிசால் மன்னவன் புனிதன்.

19. வேண்டும் நற்றவம் புரிதரு விரகினேம் யாமென்(று)
ஆண்ட கையர சயர்ந்தன னாயினும் ஆங்கண்
தூண்டு நீதியா னுன்கரந் தொலைத்தறம் நிறுத்தி
ஈண்டு நின்கரம் எழுதற்கும் உதவினன் எந்தாய்!

வேறு

20. வாழி நீதி வழங்கிய மன்னவன்
வாழி நீதி வழங்கிய மைந்தர்கள்
வாழி நீதி வழங்கு காங்களும்
வாழி மன்னறம் வாழி யுலகமே.

ஸ்ரீ சண்முகநாத அச்சகம், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[10—7—65 - ல் நடைபெற்ற சன்மார்க்கசபையின் 30-வது ஆண்டு நிறைவுவிழாவின்போது நிகழ்ந்த காவிய அரங்கில், ஐந்து கவிஞர்களால் இயற்றப்பட்ட நீதிக்கரங்கள் என்னும் சிறுகாவியத்துக்கு சு. வே. அவர்கள் நிகழ்த்திய விமர்சனம்.]

நீதிக் கரங்கள்

நம் மத்தியிலே வாழும் ஓர் அருங் கவிஞர், தம் கவிதைகளினுல் எமது உள்ளமென்னும் வீணையின் உணர்வுத் தந்திகளை மீட்டும் திறன்படைத்தவர். இச்சமயத்தில் அவர் பாடிய மூன்று பாடல்கள் என் நினைவுக்கு வருகின்றன. அவர் கவிதையை ஐந்து வயது நிறைந்த பெண்குழந்தையாக உருவகித்து, அதனை முன்னிலைப்படுத்தி, அதற்குச் சில புத்திமதிகள் கூறுகிறுர். முதலிலே, அக் கவிதைக் குழந்தையிடம் அது பிறந்த கதையையும் அது செய்யவேண்டியனவற்றையும் கூறுகிறுர்.

"அள்ளிச் சொரியும் முழுநிலவில்
அடியேன் ஒருநாள் அமுதுண்டு
துள்ளிக் கிடக்கக் கவிக்கம்பன
தோன்றிப் புணர்ந்து பிறந்திட்டாய்
பிள்ளை, அதனுல் மனைதோறும்
பெற்ற மடியில் அமுதூட்ட
வெள்ளி நிலவைக் கரம் நீட்டும்
விந்தைச் சிறுவர் இதழ்விரிப்பாய்"

இங்ஙனம் அக் கவிதைக் குழந்தைக்கு வழிகாட்டிய அவர், அது எங்கெங்கு சென்று அளவளாவிப் பழகி விளையாடிக் களிக்கவேண்டுமெனவும் கூறுகிறுர்.

"பாலர் கரங்கள் கரங்கோத்துப்
பழகுஞ் சிறிய நிரைவட்டம

சாலை வெளியின் னுறைவிடமாம்
தருவின் நிழலுன் பெருமனையாம்
வேலை முடித்து வியர்வோழுக
வீதி கிடப்போர் இசைக்கின்ற
மாலைக் கவியே நினதிடமாம்;
மகளே, இவற்றைப் பிரியாதே ”

அடுத்து என்ன கூறுகிறார்?

“பாடும் குயிலுன் பணிமகளாம்,
பனியின் துளி,உன் மணிமுத்தாம்
ஓடும் கலைமான் சகிமடவார்;
உன்னைப் பிரியார் அவர்வரவைத்
தேடும் பறவை மணிக்குஞ்சைத்
தீண்டித் தடவி இரைகொடுப்பாய்
காடும் நதியும் கரையுமேலாம்
கண்ணே கவியே மறவாதே”

இவ்வாறு புத்திகூறிய அவர், எங்செங்கு செல்லவேண்டாமெனவும் கூறுகிறார். “செல்வத்தைத் தேக்கி அச் செல்வத்தின்மூலம் உன்னையடையலாம் என்றெல்லாம் எண்ணும் தருக்கு மிகுந்த செல்வர் முன்றிலை எட்டியும் பாராதே; அவர்களுக்குச் செல்வம் முக்கியமேயன்றி, உள்ளிலூறும் ரசானுபவம் முக்கியமன்று; எனவே அவர்கள் நீ பயின்று விளையாடத்தக்கவரல்லர். அடுத்து, எழுத்துலகிலுஞ் சொல்லுலகிலுஞ் சஞ்சரித்துக் கொண்டு, கவிதையின் உயிர்மூச்சான பொருளை மறந்துவிடுகின்ற, எழுத்துப் பிழையுஞ் சொற்பிழையுங் காணுகின்ற, பண்டிதர்களிடஞ் செல்லாதே; அவர்கள் உன்னைச் சித்திரவதை செய்து அலங்கோலப்படுத்திவிடுவார்கள்; அவர்கள் உன்னை உள்ளவாறு கண்டு களிக்கத் தெரியாதவர்கள்; அவர்கள் இலக்கண முடிபும், எழுவாய் பயனிலையும் சொற்புணர்ச்சியுமான எலும்புக்கூட்டையே காண்பார்கள்; உயிரைக் காணமாட்டார்கள். ஆகையால், அவர்கள் பக்கம் எட்டியும் பாராதே, கவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைக் கண்மணியே" என்கிறார். இக்கவிஞர் வேறு யாருமல்லர்; கவிஞர் சச்சிதானந்தம் அவர்களாவர். இது நிற்க,

வங்கத்தந்த மகாகவி ரவீந்திரநாத்தாகூர் அவர்கள், "தொன்மைக்கு நெய் ஆதாரமா? அன்றி, நெய்க்குத் தொன்மை ஆதாரமா? என்று வாதிடும் தத்துவஞானிகளையும் பண்டிதர்களையும் கவிதைப் பெண்ணாள் கடைக்கண்ணாலும் நோக்குவதில்லை. ஏனெனில், அவர்களுக்கு அவள் சௌந்தரியம் தெரியாது; அதனால் சுவைக்கவும் தெரியாது" என்கிறார்.

உலக மகாகவிகளில் ஒருவரான கோல்ட்சிமித் என்பவர் கூறுவதைக் கேளுங்கள்; "ஒருநூல் ஆயிரக்கணக்கான பிழைகளுடையதாக விருக்கலாம்; என்றாலும் அது வாழலாம். மருந்துக்குத்தானும் பிழைகளற்ற ஒருநூல் சிவசமயம் பிறந்தவுடனேயே இறந்தும் விடலாம்."

கவிஞர் சச்சிதானந்தம் அவர்கள், உணர்ச்சிமயமான உயிர்க்கவிதை எங்கு விளையும் என்பதையும், அது விளையும் மனநிலத்தின் தன்மையையும் காட்டுகிறார். தாகூர் அவர்கள் காவியச்சுவையை மூளை பெருத்தவர்கள் — அறிவு மிகுந்தவர்கள் அனுபவிக்க முடியாது; மனவளம் மிக்கவர்கள் — உணர்வுள்ளம் பெற்றவர்கள்தாம் அனுபவிக்க முடியும் என்று காட்டுகிறார். கோல்ட் சிமித் அவர்கள், எந்தக் காவியமும் நிலைத்து வாழ்வதற்கு எழுத்துஞ் சொல்லும் கருவிகளே; உரிப்பொருளான உயிர்ப்பொருளே முக்கியம் எனக் காட்டுகிறார். இம்மூவரது கருத்துக்களையும் ஒன்றுதிரட்டினால் அதுவே நிறைவுடைய கவிதை விமர்சனம் என்பது எனது தாழ்மையான கருத்து.

இந்த மூவருங் காட்டிய வழியிலே சென்று, நீதிக்கரங்கள் என்னும் இச் சிறுகாவியம், காலச்சுழலில் எதிரேறி நின்றுநிலைக்குமா எனக் காணமுயல்வதே எனது முயற்சி.

அன்றொருநாள், எங்களாற் பண்டிதஐயா என்று அழைக்கப்படும் பண்டிதமணி அவர்களைச் சந்தித்தேன். அவர்களோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழுக்கல் நிலமாக விளங்கும் தமிழுக்கு ஒப்பற்ற ஊன்றுகோல்; எங்கள் இலக்கிய முயற்சிகள் எல்லாவற்றுக்கும் மூல ஊற்று. அவர் "என் வாழ்நாளிலே முக்காற்பங்கு காலம் சோதனைவைத்து வைத்து மாணுக்கர் அறிவை ஆழம் பார்ப்பதிலேயே கழிந்து விட்டது. விடைத்தாள்களைப் பார்ப்பதிலும்பார்க்க இடுப்பொடிய இருந்து கிடுகு பின்னிவிடலாம். என்றாலும், அவற்றைப் பார்த்து முடித்துவிட்டேன். ஆனாலும் ஒரு ஆசை; பெரிய பெரிய சமய அறிஞர்களுக்கும், இலக்கிய விற்பன்னர்களுக்கும், எழுத்திலும் சொலவிலும் தொங்கும் இலக்கண பண்டிதர்களுக்கும் ஒரு சோதனை வைக்க ஆசை; அவர்களுக்குக் கொடுக்கப்படும் வினாக்களெல்லாம் அறியான்வினா; அதாவது எனக்குத் தெரியாத விஷயங்களை அறிவதற்குக் கொடுக்கப்படும் வினா" என்றார்கள். நான் மலைத்துப்போனேன். "என்ன கேள்விகள் கொடுக்கப்போகிறீர்கள்" என்றேன். அவர்கள் சிரித்துவிட்டுக் கேள்விகளைச் சொன்னார்கள் : "சமயம் என்றால் என்ன? இலக்கியம் என்றாலென்ன? கவிதை என்றால் என்ன? சிறுகதை என்றால் என்ன? நாவல் என்றாலென்ன? இலக்கணம் என்றால் என்ன?" நான் சிரித்தேன். அவர் சொன்னார்: "இக்கேள்விகளுக்கு விடை பக்கம் பக்கமாய்க் கிடைக்கும். ஆனால் அவ்விடைகளிலே அவரவரின் அறிவுத் திறமைதான் வெளிப்படுமேயன்றி, குறித்த பொருள்களுக்குரிய வரையறை வெளிப்படாது" என்றார்கள். இன்னும் நாம சொற்பிரபஞ்சத்திலே வாழ்கிறோமேயன்றிப் பொருட்பிரபஞ்சத்தை—உயிரைத்—தொட முயலவில்லை என்பதை அவர்கள் வெகு நளினமாகக் காட்டினார்கள். இந்நிலையில் ஐம்பெரும் கவிஞரின் நீதிக்காரங்களின் உண்மைப் பொருளைக் கண்டுணர என்றால் முடியுமோ?

நல்லது, நீதிக்காரங்கள் உங்கள்முன்னே நீண்டு தோன்றுகின்றன. இந்நீதிக்காரங்களென்ற ஐம்பெரும் புலவர்களின் சிறு காவியக் கதையை முதலிற் காண்பதே பொருத்தமுடைத்து.

இக்கதை சாந்திபர்வத்திலுள்ளதொரு அருமையான கதை. முன்னொரு காலத்திலே சத்யமன் என்றொரு அரசன் வாழ்ந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான். அவன் நாட்டிலே திருடர்பயம் மிகுந்திருந்தது. அதனால் களவு செய்வார் யாராயினும் அவர்கள் கரங்கள் வெட்டப்படும் என்னும் தண்டனை சட்டபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அச்சட்டம் நிறைவேறியபின், அத்தண்டனையை எவரும் அனுபவிக்கவில்லை. ஏனெனில் எவரும் அந்நாட்டிற் களவு தொழில் செய்யவில்லை. அந்நாட்டிலே அழகியதொரு வனமுண்டு. அதன் ஒரு எல்லையிலே, காய்கனிகள் நிறைந்ததொரு சோலையின் நடுவிலே சங்கர் என்னும் முனிவர் ஒருவர் தவஞ்செய்தார். மற்றொரு எல்லையிலே லிகிதர் என்னும் முனிவர் தவம் செய்தார். இருவரும் சகோதரர்கள். ஒருநாள் லிகிதர் தன் தமையனான சங்கரைக்காண அவரது தவப்பள்ளியையடைந்தார். அங்கு சங்கர் இல்லை. அதனால் லிகிதர், மலர்ச்சோலையில் உலாவிவருமபோது ஏதேஷ்டமாகப் பழுத்திருந்த பழங்களைக் கண்டு அவற்றிற் சிலவற்றைப் பறித்து உண்டார். அச்சமயத்திலே தமையனாரான சங்கர் அவ்விடம் வந்தார். தம்பியின் செயலைக் கண்டு எவருத்தரவுமின்றிப் பழங்களைப் பறித்தமையாலே தன் தம்பிமீது களவுக் குற்றம் சுமத்தினார். அப்நாட்டு வழக்கப்படி, அரசனிடஞ் சென்று கரங்கள் இரண்டையும் வெட்டும் தண்டனை பெற்றுவரும்படி கூறினார். மூத்தோன் சொற்படி அரசனிடஞ் சென்று, தான் செய்த தீங்கையும் அரசன் செய்யவேண்டிய நீதியையும் எடுத்தியம்பி, இரு கரங்களும் துணிக்கப்பட்டுத் திரும்பினார். பின்னர் தமையனாரின் கட்டளைப்படி ஆற்றில் மூழ்கி எழுந்து இழந்த கரங்களைப் பெற்றார். இதுதான் கதை.

இனி, இக் காவியத்தின் உயிர்ப் பொருளான உரிப்பொருள் எதுவென்பதையும், அது எவ்வாறு கிளைத்து வளர்ந்தது என்பதையும் காணல் அமைவுடைத்தென எண்ணுகிறேன்.

இக்காவியத்தின் உரிப்பொருள் தவமுனிவரான லிகிதரின் களவு, அக்களவைச் சாதாரணக் கண்கொண்டு பார்க்கும்போது வெகு அற்பமாகத்தான் தோன்றும். லிகிதர் தன் அண்ணனுக்குச் சொந்தமான சோலையிலே, தன பசித்துன்பத்தைப் போக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவதற்காக, உரிமையோடு சில பழங்களைப் பறித்தார். இது எங்ஙனம் கைகளை வெட்டும் அளவுக்கு மாபெரும் குற்றமாகும் என நினைக்கிறோம். ஆனால் இச் சிறுகளவும் துறவுநிலையில் நிற் போர்க்கு மாபெருங் குற்றமாகிவிடுகிறது. திருவள்ளுவர் கள் ளாமை என்னும் அதிகாரத்தைத் துறவறவியலில் அமைத் தமையே இதற்குச் சான்றாகும், கள்ளாமை என்ற அதிகார முகப்பிலே பரிமேலழகர் எழுதும் விளக்கம் அதனைத் தெளிவு படுத்துகிறது."இல்லறத்தார்க்குத் தமரோடு விளையாட்டுவகையால் அவரை வஞ்சித்து, கோடற்கு இயைந்த பொருள்களை அங்ஙனம் கொள்ளினும் அமையும். துறந்தார்க்காயின் அதனைக் கருதிய வழியும் பெரியதோரிழுக்கம் ஆகலின் கள்ளாமை துறவறமாயிற்று. கள்ளாமை என்பது பிறருடைமையாயிருப்பது யாதொரு பொருளையும் அவரை வஞ்சித்துக் கொள்ளக் கருதாமை. கரு துதலும் செய்தலோடொத்தலின் கள்ளாமை" என்கிறார் பரிமே லழகர். பிறர்பொருளை அது கேவலம் பழமாயினும் அவரனு மதியின்றிப் பறிக்க எண்ணுவதுகூடத் துறந்தார்க்கு அறமாகாது. ஆனால், விகிதரோ, எண்ணுதலோடமையாது அக் கனியைப் பறித்து உண்டுவிட்டார். இப்போதுதான் முனிவராகிய, துறந் தாராகிய விகிதர் செய்த தவறின் கனத்தை நாம் உணரமுடி கிறது.

விகிதரின் மனம் சலனமடைந்த நிலையிலேயே களவு நிகழ் கிறது. என்ன சலனம்? பெரிதாக எதுவுமில்லை. அதனைக் கவிஞர் நாகராஜன் அவர்கள் காட்டுகிறார்கள்.

"காற்றிலே ஆடும் இன்பக் கனிகளின் வாசங் கூடும்
ஆற்றிலோ குளிர்ந்த நீர்தான் ஆடியே அசைத்து செல்லும்
கூற்றுவன் கொடுமை போலக் கொடும்பசி வயிற்றை வாட்டி
ஆற்றலை அழிக்கச் செய்யும் ஆங்கவர் என்ன செய்வார்?"

— [கனிகொய் படலம் 25]

அதனால்,

"பசியினைப் போக்க அந்தப் பாமனின் பத்த னுங்கே
சுசிமிகு கனிகள் தம்மைத் தூயதன் கரமேற் கொண்டே

அசைவற வாயால் மெல்ல அமைதியாய்ப் புசித்தான் ஆங்கே
திசையுறு புகழான் அண்ணன் திருமுக மதனைக் கண்டான் "

— [கனிகொய் படலம் 28]

இச் சலன நிலையை, முனிகோபப் படலத்திலே கவிஞர் கதிரேசர்பிள்ளை அவர்கள் காட்டுகிறார்கள். அவர்,

" அண்ண நின்திரு வடியிணை வணங்கவிங் கணைந்தேன்
கண்ணில் நின்றனைக் காண்கிலேன் கனிமிகு சோலை
நண்ணி ஆங்குள காட்சியை நயந்தபோ திவற்றை
உண்ண லாமெனத் தமியனேன் பறித்தனன் உணர்க"

[— முனி கோபப் படலம் 14]

இரு கவிஞர்களும் கனி கொய்வதற்கு விகிதரின் மனம் சலனமடைந்த நிலையைக் காட்டுவதில் சிறிது மாறுபடுவது போன்ற எண்ணம் விழுகிறது.

விகிதரின் சலனமடைந்த மனத்திற் பிறந்த களவு என்னும் உரிப்பொருள் — அஃதாவது இக் காவியத்தின் வித்து முதலாவது அத்தியாயமான கனிகொய் படலத்திலே முளைகொண்டு வளரத் தொடங்குகிறது. அதன் வளர்ச்சியின்போது அந்த உரிப்பொருளின் கிளைகளாகப் பல பண்புகள் தோன்றுகின்றன.

விகிதர் கனிகளை உண்டார். அந்த வேளையிலே அவர் தமையனாரான சங்கர் அங்கு வந்தார். தமது உத்தரவின்றிக் கனி பறித்த தன் தம்பியின் செயலை உணர்ந்தார். அவர் அற நெஞ்சில் முனிவு பிறந்தது. முனிவு பிறந்தது என்று கூறுவதிலும் பார்க்கக் கனிவு - தம்பியைத் திருத்த வேண்டுமென்ற கனிவு பிறந்தது என்று கூறுவதே மேல். உடனே சங்கர் விகிதரை நோக்கி,

"என்றன் உத்தர வின்றிவை பறித்தனை யிதனால்
மன்று ளாருனைத் திருடனாய் மதிக்க நின்றனையே" -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சங்கர் கூறியபோது, அவர் வார்த்தைகளின் பொருளை விகிதர் உணரவில்லை.
அவர்,

எமதேன் றெண்ணமே கோண்டனன் ஏனெனில் நீதான்
அமைதி அண்ணனும் ஆதலின் எனப் பதில் அளித்தான்.

அப்பொழுது சங்கர்,

"பொருளை வேண்டுவார் உடையவ ரிடஞ்சென்று புகன்றுந்
துணிமை பெற்றபின் கோள்ளலே உயர்வுடைத் தாகும்
அருமை யண்ணனே யாயினும் அன்னையே யெனினும்
பெருமை யன்றவர் பொருளினை மறைவினிற் பெறலே"
—முனிகோபப்படலம்

என்று அறிவுரை கூற, விகிதர் தன் பிழையை யுணர்ந்து வருந்துகிறார்.

"காதலாற் கனி அருந்திடு விசிதரும் கருத்தில்
மோது மாசையால் இச்செயல் புரிந்தனன்
தீதென் றெண்ணினேன்"

எனத் தன் பிழைக்காக அழுங்குகிறார். இவ்வாறு விகிதர் தன் பிழைக்காக அழுங்குதல் உரிப்பொருள் வளர்ச்சியிற் பிறந்த ஒரு கிளை.

விகிதர் தண்டனை பெறுவதற்காக அரசவையை அடைகிறார். அங்கே நீதியின் இரு கோணங்களுக்கிடையே போராட்டம் தொடங்குகிறது. ஒன்று சபையோர் நீதி; மனித நீதி. மற்றது துறந்தோர் நீதி. சத்யுபனிடம்

"வாழ்வி னின்னிசை யின்றென திச்சையால்
வசை படிந்தவோர் புன்னிசை யானது
நாளே லாம்தவஞ் செய்திடும் முன்னவன்
நலமி குந்தநற் சோலையி லேகனி
ஆளு மென்மனக் கண்கவர்ந் தீர்த்ததால்
அவன்றன் உத்தர வின்றிப் பறித்தனன்
நீள் தவத்தினன் நின்னவை சென்றுடன்
நீதி நூல்வழி நில்லெனக் கூறினன்.
— [அரசவைப்படலம்]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று தன் கருத்தைக் கூறுகிறார். உடனே அரசன், பெருந் தவத்தரான விகிதர் இச்செயலாற் கறையுடையராக மாட்டா ரென எண்ணி எதிர்வாதமிடுகிறான்.

"மன்னவற்கும் மனுநெறிக்கும் தீங்குண் டாக
மாநிலத்தோர் புரிகுவரேல் அன்னார் தம்மை
முன்னிறுத்தித் தண்டனைசெய் உரிமை போல
மூதறிவர் உளந்திருத்தத் தயவு காட்டி
கன்னிலையில் வைத்திடற்கும் உரிமை உண்டே"
நாடுமுயர் இவ்விதியால் கானின் றூமனை
சொன்னமுறை தண்டிக்கத் துணிய மாட்டேன்
துணைபுரிவார் தமையொறுத்தல் தூய்மை யாமோ?

— [தண்டனைபெறு படலம் 3]

அதற்கு விகிதர்,

"நீதி மாறிடு மன்னனை நேர்வழி
நிற்க வைத்திடு வேனென் றுளங்கொளா
ஆதி நூல்மனு வாசக நெஞ்சினில்
ஆயந் துணர்ந்தவன், மன்னவ! நீசொலும்
சூதி லாதநல் வார்த்தை விளக்கொளி
சூழ்ந் திருக்க வதனநடு வேயிருள்
பேதி யாதும றைந்திடல் ஒத்ததே
பின்ன முற்றறம் பேண மறந்தனே.

— [தண்டனைபெறு படலம் 6]

இந்நிலையில் விகிதர் நீதியின் இரு பகுப்புக்களைக் காட்டி மன்னனுக்கு விளக்குகிறார்.

அண்ணன் கூறிய நீதி யுதுவன்றி
எண்ணக் கூடிய தெங்கணு மில்லையால்
மண்ணில் வாழ்பவர் நீதி யெமக்கன்று
திண்ண மாகலித் தீக்கரம் போக்கென்றார்.

-- [தண்டனை பெறுபடலம் 14]

தாயர் தந்தையர் தம்மவர்க் கோர்நீதி
செய்மை யாளர் செறுநர்(கு) ஓர்நீதி
மாய நீதி மலைக்கும் உலகமே
ஆயு மோஇவர் ஆற்றிய நீதியை

— [கரம்பெறு படலம் 11]

6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரதன் இராமனிடம் அயோத்தியடைந்து அரசாளும்படி வேண்டுகிறான். இராமன் தந்தை சொற்றவறேன்; தாயுந் தந்தையும் உனக்குத் தந்த அரசை நீ ஆளல் வேண்டும்.'' என்று மறுத்துரைக்கிறான். அப்போது பரதன், "ஐயனே, அப்படியானால் எனக்குரிய அரசை நான் உனக்களிக்கின்றேன்; நீ அயோத்தியடைந்து அரசாள்க" என வேண்டுகிறான். இது போன்ற ஒரு நிலையை நாம் இங்கு காண முடிகிறது. இன்னமயாகத் திக்காம் போக்கு என்று முனிவர் கூற, அரசன் பரதனின் நிலையில் நின்று,

முனிவரர் ஏறே! சொன்ன முறையினிற் கரத்தை நீக்கி
இனிதுற மீண்டும் உம்பால் ஈந்தனன் என்றே கொள்க
துனியறு துறவோர்க் கீதல் தொன்முறை அரசர்க் குண்டே
புனிதமாம் கரத்தைப் பெற்றீர் புறப்படல் செய்க என்றான்.

— [தண்டனைபெறுபடலம் 15)

அதற்கு, லிகிதர்

கரங்களை இழந்தி டாது கடுவனம் சென்றால் மூத்தோன்
உரமுடை மனமி லாது உறுவழி பாதி சென்று
திரும்பியே விட்டாய் என்று தீக்கனல் சொரிவான் இந்தப்
பெரும்பழி எனக்கு வேண்டாம் பிரித்திடு கரத்தை என்றார்.

— (தண்டனை பெறுபடலம் 16)

இவ்வாறு நீதியின் இருமுனைகளுக்கிடையே நடந்த போராட்டம் முடிவடைகிறது.

தண்டனை புரிவார் தம்மைத் தருவித்த லிகித ரின்கை
துண்டிடும் நீதி குன்றா வகையெனத் துணிந்து சொல்லி
பண்டைநூல் அறவோர் சென்ற பாதையிற் சென்றான் மன்னன்
அண்டரும் வியந்து போற்ற ஆங்கவர் கரந் துணித்தார்.

— (தண்டனைபெறு படலம் 18)

ஆதலால் உண்மை நீதி வெல்கிறது. உரிப் பொருளின் வளர்ச்சியிலே நீதியின் வென்றி இன்னொரு கிளையாகத் தழைக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணப்போது நிகழ்ந்த மனச் சலனங் காரணமாக லிகிதர் களவு செய்தது என்னவோ உண்மைதான். பின்னர், தான் செய்த தவறை உணர்ந்தபோது அவர் அடைந்த மனப் பரிசுத்தம் மிக மெச்சத் தக்கதாக இருக்கிறது.

அதனை

" இருபுய மற்றிட உதிரம் பெருகிட
இன்ப முறும் லிகிதன்
வருமுயர் வுன்னு மனத்தொடு யரதொரு
வாதனை யற்ற வனாய்
பெருகு முணர்வுறு முன்னவன் சொல்லினைப்
பேணினன் வாழ்ந்தனன் என
றருகுறு காடு அடைந்து மகிழ்வொடு
ஆறி கடந்தன னே "

— [தண்டனை பெறு படலம் 21]

பின்னர்

சங்கர், அருவியாடிவா என்ற போதும் பிதிர்களுக்குத் தருப்பணம் செய் என்றபோதும், லிகிதரின் அறிவு கைகளின்றி எப்படித் தருப்பணம் செய்வேன் என்று நியாய வாதமிட வில்லை. மனத்தூய்மையே அங்கும் மேலோங்கி நிற்கிறது.

அண்ணனுரை செவிபுகலும் அருங்கரங்கள்
அறுபட்டோன் ஆற்றில் ஆடி
எண்ணி யெண்ணி இருகரத்தால் இனியதருப்
பணமியற்றல் எங்ஙன் என்றே
புண்ணியனும் லிகிதனவன் புந்தி கொள்ளான்
புனிதநதி தன்னுள் மூழ்கிக்
கண்விழித்துத் தலைதூக்கக் கரமிரண்டும்
முன்தூங்கும் காட்சி கண்டான்.

— [கரம்பெறுபடலம் 4]

லிகிதர் தேடற்கருந் திரவியமாகப் பெற்றுக்கொண்ட மனத் தூய்மையும் உரிப்பொருள் வளர்ச்சியிலே தோன்றிய ஒரு கிளையெனக் கொள்ளல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்து, பாத்திரப் படைப்பும் அப்பாத்திரப்படைப்பு வழியோடும் உணர்வு வெள்ளத்தின் நிறைவுங் குறைவும் நோக்கற்குரியன. இச்சுருங்காவியம் பாத்திரச் சிக்கலற்றது. சங்கர், விவிந்தர், அரசன் என்னும் மூன்றே மூன்று பாத்திரங்களே கதை நடத்திச் செல்கிறார்கள். இங்கே மூன்று பாத்திரங்களும் முக்கியமானவர்கள். இக்காவியத்திலே ஒவ்வொருவரும் அவரவர் நிலையிலே கவிஞர்களின் கலைவண்ணத்தால் முழுமை பெற்று விடுகின்றனர். அதற்கான உதாரணங்கள் பலவற்றைக் காட்டலாம்.

அடுத்து காவியத்திலே காணப்படும் கற்பனைவளம் வருகிறது. முன்னே காட்டிய உரிப்பொருளைச் சுற்றி, கவிஞர்களின் மனோபாவம் எம்மையெல்லாம் எங்கெங்கு அழைத்துச் செல்கிறது என்பதே இங்கு எண்ணப் பொருந்தமட்டில் கற்பனை எனப்படுகிறது. அந்த வளத்துக்கு, காவியம் குறுகையுடையதானாலும் கற்பனைக்குப் பஞ்சமில்லை. மாதிரிக்கு ஒவ்வொன்று.

"ஓர்தினங் கங்குல் நீங்கி உடல்மெலி கிழவன் போலப்
பார்தனைத் திரும்பிப் பார்த்துப் பையவே ஈகருங் காலை
சீர்திகழ் அண்ணன் தன்னைத் தேடியே தொழுதுபோற்ற
பேர்பெறு விகிதர் உள்ளப் பிரியமே கொண்டு வந்தார்"

— [கனிகொய் படலம் 18]

"வாச நன்மலர் சுமந்தயல் மரங்களிற் படர்ந்து
வீசு தென்றலில் ஆடிடும் மென்தளிர்க் கொடிகள்
பூசை செய்வன போன்மலர் சொரிந்திரு புறத்தும்
நேச மோடவன் தாளிணை தாழ்ந்துபின் நிமிர்ந்த"

— [முனி கோபப் படலம் 5]

உலகினை யுடைமை யாக்கி உடைமையின் உயிரு மாகிப்
பொலிவுறு செயல்கள் தாமே பொழுதெலாம் புரியு மன்னன்
கொலைபுரி வேடன் கையிற் கொடுத்திடத் தசையி லாமற்
கலையுடற் தசையைத் தாமே கனித்தளித் தனனே, என்னே.

[அரசவைப் படலம் 19]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிள்ளைகள் குயில்கள் எல்லாம் கிளர்ந்தொலி பரப்பி அன்னன்
உள்ளமே களிக்கச் செய்ய, ஊர்ந்திடும் ஓடைத் தண்ணீர்
மெள்ளவே அசைந் தசைந்து மேலவன் தம்மைத் தொட்டு
அள்ளியே புனித மாக்க ஆணைகை யிலேஎண் றேங்கும்.

— [தண்டனையுறுபடலம் 24]

பாயு மாற்றினில் தோய்ந்து பழங்கரம்
மேயி னன்விகி தப்பெயர் மெய்யினன்
சாயு மாயினும் ஊனுடல் சாலவும்
தூய தென்றான் னீதி தொடர்தலே.

— [கரம்பெறு படலம் 6]

இக்காவியக் கதை எமக்கு பொற்கையான் மாறன்குல சேகரப்பெருமான், அதாவது பொற்கைப்பாண்டியனின் கதையை நினைவுபடுத்துகிறது. இவ்விரண்டையும் ஒப்பிட்டுப்பார்த்தல் அமைவுடைத்து.

விகிதரை மிகப் பரிசுத்தமுடையராகக் காட்டி, கடைசியிலே 16, 17-ம் கவிதைகளில் அவர் நிலையைத் தாழ்த்தக்கூடியதாகச் சங்கர் கூறுவது போன்ற மொழிகள் பொருத்தக் குறைவாய்த் தோன்றுகின்றன.

களவின் தீமையை வலியுறுத்திய சங்கரென்னும் பாத்திரத்துக்கு, கவிஞர்கள் திருக்குறட் கள்ளாமையின் கருத்துக்களையும் கூட்டியிருந்தால் கருத்திற்கனம் ஏறியிருக்கும்.

முடிவாக, இக்காவியம் நின்று நிலைக்கக்கூடும். இம்முடிபு எனது மனத்தராசின் எடை. இனி, எழுத்தெண்ணிக்கற்று சத்திர சிகிச்சை செய்பவல்ல பண்டிதத் தராசுகளின் எடை என்ன நிறை காட்டுமோ!

வணக்கம்.

UNIVERSITY OF CEYLON
1971
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விமர்சனம் 2

பண்டிதர்: க. சச்சிதானந்தன், பீ. ஏ.

காவியங்களைப்பாடுவதிலும், காவியங்களின் கருப் பொருளை அமைப்பதே மிகக் கடினமானது. கம்பன் கவிச் சக்கரவர்த்தியாயினும், இராமாயணக் கதையைக் கருவாகக் கொண்டமையினாலேயே அவன் காவியச் சக்கரவர்த்தியானான்.

இலக்கியத்தின் உருவத்தைக்காட்டிலும், உட்பொருளே உயிராகும். உடம்பாகிய உருவத்திலே உயிர் நிற்பதாயினும், உடலே உயிராகாது. அதேபோல, உயிராகிய உட்பொருள் உருவத்திலே கலந்து மறைந்து நிற்கும். இவ்வுட் பொருள் உயிராதலில் இதனைப்பெற்ற எந்தக்காவியமும் அழியாது. கோசலையின் வயிற்றிலே பிறந்த இராமன் என்றோ இறந்துவிட்டான். கம்பன் வாயிலே பிறந்த இராமன் இன்றும் வாழ்கின்றான். தேவதச்சர்களால் இயற்றப்பட்ட இராவணன் கோட்டையின் அடையாளத்தையே காணோம். ஆனால், சொல்லாகிய கற்கொண்டு செதுக்கிய கம்பனின் கோட்டை காலதேவனையும் எதிர்த்துநிற்கும் மர்மம் என்ன? சித்திரகூட மலர்களும், குகனுடைய தேனும், பஞ்சவடி மணலும் மனத்தைக் கொள்ளை கொள்ளுவதென்ன? பேராதனையின் உண்மைப் பூங்காவைக் காட்டிலும் கம்பனின் சொல்லாற் கட்டிய பூங்காக்களின் மலரிற் கிடந்து, மயிலுடன் ஆடி குயிலுடன் பேசிமகிழும் நம் மனத்தின் தன்மையென்ன?

ஒருவர் அன்பு கொள்ளுவது எவ்வாறென்று புத்தகங்கள் எழுதி வழி காட்டும் இன்றைய உலகத்திற்குக், காவியங்களில், உயிர் நாடி, உட்பொருள் நாடி, உண்மைகாட்ட வழிதெரியாது எழுத்தாளர்களும் கவிஞர்களும் பதைக்கிறார்கள். ஆனால் காவியத்திற் சொட்டும் இன்பத்தேனுக்குத் தமிழ் மக்கள் நா மரத்துப் போய்விடவில்லை எடுத்த விழாக்களிலெல்லாம், கவியரங்கத்திற்கு வந்து குவிந்து நா நீட்டி நிற்கும் மக்களின் கும்பல் இதைக் காட்டுகிறது. அன்பும் அறனும் வியாபாரச் சாக்காய்க்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட மேனாட்டு வாழ்க்கையிலே முளைத்த பொழுதுபோக்கு நூல்களை இலக்கியமென்று தமிழ்மக்கள் நா சப்புக்கொட்டாது. தமிழ் இலக்கிய மரம் பல்லாயிர வருடகாலமாக காற்று, மழைகளுக்கு எடுபடாது வேரூன்றி நிற்கும் பெருமரம். விழுந்துபோகும் சருகுகளும், தோன்றி மறையும் பூண்டுகளும் அதற்கு உரமாகி அதன் கடுவிலே ஒரு வைரம் பாய்ந்து கிடக்கிறது. காலஞ் செல்லச் செல்ல அந்த வைரம் கடுவைரமாகி நிற்பதால், அதிலே இன்றைய விமர்சனக் கோடரி பாயாது. அரசியற தத்துவம் மூடிய பிரசார இலக்கியங்களுக்கு மிண்டு கொடுக்கும் விமர்சனக் கத்திகள் இவ்வைரத்திலே படாரென்று தெறிக்கும். ஆதனால் மரம் வளரவில்லையென்று யாரும் கூறமுடியாது! அதன் வெளிச் சோற்றி புதிய ஆக்கங்களை வரவேற்று வளர்கிறது ஆனால், இவ்வெளிச் சோற்றி பின் வைரமாக மாறவேண்டும்; அதனால் உள்வைரத்துடன் மாறாத பண்டத்தையே இவ்வெளிச் சோற்றி ஏற்றுக்கொள்ளும். தமிழிலே எழுதிக்குவித்த கதைகளிற் சில மக்களின் மனதிலே தவழ, ஏனைய பத்திரிகைக் குப்பைகளிலே இலக்கிய உரமானதற்கு இதுதான் காரணம்.

இந்தக் குறுங்காவியத்திற்கு ஏற்ற உட்பொருள் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதனைக் கூறவே இவற்றை விரித்தோம். கனக. செந்திநாதன் தாம்கொடுத்த குறுங்காவியக் கருப்பொருளினாலே தம்மைக் காவியத்தில் தோன்றாத தந்தையாக்கிக்கொண்டார். காவியத்தைப் பாடுவதிலும் அதன் கருப்பொருள் பெறுவதே கடினம் என்று முன்னரே கூறினோம். அண்ணனும் தம்பியுமாக இருவர் அறம் வளர்ப்போராய்க் காட்டில் வாழ்கின்றார்கள். தம்பி அண்ணனறியாது அவ்வனத்திலே ஒருகனியைக் கவர்ந்து விட்டார். அக்கனியைப் பறித்தது குற்றம் என்று அண்ணன் கூறுகிறார். தம்பி அது குற்றமன்று என்று வாதிடுகிறார். பின்னர் அரசன் முன்னிலையிலே நீதிகேட்டு ஏற்ற தண்டனை பெறச் செல்கிறார். அரசனுக்கும் தம்பிக்குமிடையில் நீதிவாதம் நடைபெறுகிறது. தண்டனையைப் பெற்றுக் கரங்கள் துண்டிக்கப்படுகிறார். அண்ணனிடம் வருகிறார். அண்ணன் முகம் மலர்ந்து ஆற்றிலே நீராடித் தருப்பணம் செய்யென்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Positive
Negative
Reel No. 1/060
Date: 24.09.91

கூறுகிறார். காமமற்றவர் பின்முன் யோசியாமலே ஆற்றிலே மூழ்கித் தருப்பணம் செய்யச் செல்கின்றார். மூழ்கியெழுகையிற் கால்களை மீண்டும் பெறுகிறார். இதுதான் இக்காவியத்தின் கருப்பொருள்.

இதிலே அண்ணனையும் தம்பியையும் அரசனையும் உயிர் பெற்ற ஓவியங்களாக வரைவதற்கு ஐந்து கவிஞர்கள் பொறுப்பேற்றுள்ளார்கள். அவர்கள் மிக அழகாக இக் கருப்பொருளை மலர்த்தியிருக்கிறார்கள். வெவ்வேறு தனித்தன்மை உடையவர்கள் ஒரே கருத்தை இழையறாது தொடர்ந்து உருவாக்கியமை பாராட்டுக்குரியது.

நாகராஜன் அவர்களின் நாட்டுவளமும் சோலைவளமும் மெல்லெனச் செல்கின்றது. சத்யுமன் நாட்டின் ஆட்சியை அவர் சில கவிகளிற் காட்டியிருப்பது எளிமையும், மென்மையும் துலங்க நிற்கின்றது. "மானினம் குதித்து ஓடா. மரையினம் வெருட்சி கொள்ளா, கானவர் குழல்கேட்டுள்ள கரியினம் அசையா" என்று செல்லும் கவியிலே சூழலின் புனிதத்தன்மையைக் கூறுகிறார். அதற்கொப்ப, "பொய்யர்களில்லை", "இல்லையென்றுரைப்பாரின்றி", "ஏரியில் நிறைந்த நீரை" என்னும் பாக்கள் சூழலின் கபடமற்ற தன்மையைப் புலப்படுத்துகின்றன. அண்ணனுடைய தோட்டத்திலே, அவனோடு வாழும் தம்பி கனிகொய்துண்டது குற்றமா? என்ற கேள்வி எழாதிருப்பதற்கு இத்தகைய வர்ணனை மிகப் பொருத்தமே. சூழலின் புனிதமே, அற்ப செய்கையையும் குற்றமாக்கியது. "மட்டிலா எழிலும்" என்னும் பாடல் இதனை மேலும் புனிதமாக்குகிறது. நாகராஜன் படைத்த சோலையில் அழகு மாத்திரமன்றிப் புதுமையும், நிறைவும் மிளிர்கின்றன. உறுமீனுக்காய் ஒற்றைக்காலில் நிற்கும் கொக்கு, இன்னறுஞ் சுனைகள், வண்ணத்தாமரைகள், ஆற்றுமேட்டிடை தாவும் அணில்கள், மனத்தைக் கொள்ளைகொள்ளுகின்றன. கருப்பொருளை வளர்க்க அவர் எடுத்த சூழல் வர்ணனை, பாத்திரங்களின் உன்னத குணவிலாசத்துக்குச் சுருதி போடுகின்றன.

இந்தப் புனிதத்தன்மை சிதையாவண்ணம் கதிரேசர்பிள்ளை தொடர்கிறார். "வந்த மாதவற் காண்டலும் வனத்துறை யான்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூர்த்தி ஒடியம் முனிவான் முன்புறச் சூழ்ந்த" என்றும், "வீசு தென்றலில் ஆடுறும் மென்தளிர்க் கொடிகள், பூசை செய்வன போன்மலர் சொரிந்திரு புறத்தும் நேசமோடவன் தாளிணை தாழ்ந்தபின் நிமிர்ந்த" என்றும்கூறி, 'இன்ன சூழலே' என்று தொடுப்பது மிகப்பொருந்துகிறது. தமையனின் குணத்துக்கு வர்ணம் தீட்டும் பொறுப்பு இவருடையதே. "மன்னுளானுனைத் திருடனாய் மதிக்க நின்றனையே", "இங்கு யானுனக் கனுமதி வழங்கிலேன்", "அருமை யண்ணனேயாயினும், அன்னையேயெனினும் பெருமையன்றவர் பொருளினைப் பெறலே" என்றும் கூறுபவரின் குணத்தோற்றம் நன்கு வெளிவருகிறது. எல்லாவற்றிற்கும் முடிவைத்ததுபோல், "பொறுத்து யானுனை விடுதலிங்கெளிதது புரியின்" என்ற பாடலில் ஏன் மன்னிப்புக் கொடுக்கக்கூடாது என்பதற்குக் காரணம் கூறுகின்றார். அன்றியும் அத்தண்டனையை அரசன் தாப்பெறுதலே பெருமை என்று சொல்லுகின்ற அண்ணன் நீதியைச் செலுத்தும் அரசனிலும் பெருநீதிச் சக்கரவர்த்தியாகிறார்.

அம்பியின் அரசவை வழிக்காட்சி புதுமையுடன் பொலிகின்றது. "சலசலத்துச் சதிர் புரிந்தும் தாமிகுந்த நிறைப்பணி. கலகலத்துக் கதிர் குலுங்கிக் கனிபெருகும் பேரொலி", "புதுநகை மலர்ந்ததென்ன மாலைப் பொழுதில் வரும் மாருதம் என்பன புது மணம் வீசுகின்றன. இவர் தம்பியின் குணபாத்திரத்திற்குக் கண் திறக்கவேண்டியவராகின்றார். அரசனிடம் இந்தக் குற்றத்துக்குத் தண்டனை எதுவென்று கேட்க வந்திலர் தம்பியார். தண்டனை விதித்தாயிற்று, அதனை முடிப்பதே அரசன் கடமை என்று கூறுதலால், அரசனிலும் மேன்மை பெற்றுக் கொண்டார். "உம்மிடம் சென்றுமே நீதியாய்க் காம் போக்கென்று கூறினான்" என்பது சுவைக்கத்தக்கது. ஆனால், அரசன் இவனையும் வென்றுமேலே ஒரு படி செல்கிறான். இருவர் வாதங்களையும் வாசிப்போர்க்கு ஒருவரையொருவர் விட்டுக் கொடாமை புலப்படுகின்றது.

நா. ஆறுமுகம் தமிழ்த்தேனை வடிக்கிறார். சொற்செறிவு, சொல்லிணைப்பு, இழுமெனுமோசை இவர் பாடலில் இழைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Positive
Negative
Reel No. 1/060
Date: 24.09.91

செல்கின்றது. ஆறுமுகத்தாரின் மன்னவன் அம்பியின் மன்னை வரை எட்டுணையும் மாற்றுது செல்லுவது ஆச்சரியத்தை தருகிறது.

தவமுனிவ தருமநெறி அரசு தாங்கத்
தக்கதுணை யாவருக்குஞ் சான்றீர் நீவிர்.

என்ற பாடல், அரியணையிருந்து பேசும் அரசனின் மிடுக்கையும் தவசியின் முன்னால் நிற்கும் தாழ்மையையும் ஒருங்கே பிரதி பலிக்கிறது. கைகளைக் குறைக்க தம்பி சொல்லும் கடைசி வாதத்துக்கும் அரசன் தாழ்ந்து நிற்கிறான். இதனை வெகு சாமர்த்திய மாக ஆறுமுகத்தார் அமைத்துள்ளார். "முனிவரர் ஏறே சொன்ன முறையினிற் கரத்தை நீக்கி இனிதற மீண்டும் உம்பால் ஈந்தனன் என்றே கொள்க" என்ற அடிகள் அரசனை மிக அழகுற வணைகிறது. "அள்ளியே புனிதமாக்க ஆணையிலை" என் றேங்கும் ஓடைத்தண்ணீர்போலத்தான் ஆறுமுகத்தார் கவியும் தெளிந்து செல்லுகின்றது.

வித்துவான் சி. ஆறுமுகத்தாரின் பொறுப்பு மிக உயர்ந்தது. அதை மிகச் சாதுரியத்தோடு முடித்துள்ளார். "சிந்தித் துப்பாராதே செய்த பிழை சிறிதெனினும்" என்று தொடங்கும் போது கவிகள் கம்பீரமாக எழுகின்றன.

"எண்ணியெண்ணி இருகரத்தால் இனிய தருப்பணமியற் றல் எங்ஙன் என்றே புண்ணியனும் லிகிதனவன் புந்திகொளான்" என்ற அடிகளிலே காவியத்தின் கருப்பொருளின் காததந்தி ஓசையிடுகிறது.

"தாயர் தந்தையர் தம்மவர்க்கோர் நீதி" என்ற பாடல் தமையனின் பெருங்குணத்தை வெளியிடுகிறது.

வித்துவான் சி. ஆறுமுகத்தின் கவி சங்கநாதம் செய்கின்றது. கா. ஆறுமுகத்தாரின் கவி யாழ்போலக் குழைந்து குழைந்து மருட்டுகிறது. அம்பியின் பாடல் காலைத்தென்றல்போல புதுமை கொட்டித் தவழ்கிறது. கதிரேசர்பிள்ளையின் பாடல் மல்லிகை மாலையின் வண்டுபோலவும், மார்கழிமாதத்து மடுவின் நிறைவுபோலவும் இன்னோசையும், நிறைவும் கொண்டது. நாகராஜன் பாடலிலே அன்னத்தின் முதுகைத் தொடும்போது உண்டாகும் மென்மை யுணர்ச்சியும், ஊர்ந்துசெல்லும் அருவி மணலை அரிப்பதுபோல மனத்தைக் கரைக்கும் தன்மையும் ஒருங்கே கொண்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

UNIVERSITY OF CEYLON
3 - AUG 1971
LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் ஒரு சிறு காவியம். இக்காவியத்தை ஐந்து கவிஞர்கள் சேர்ந்து பாடியுள்ளார்கள்; கவி அரங்கத்திற்கே புதுமையான படைப்பு இது. 'நீதிக்கரங்கள்' என்ற இந்தச் சிறு காவியத்தின் கருப்பொருள் அருமையானது; உயர்வானது. **கனக. செந்திநாதன்** தாம் கொடுத்த குறுங்காவியக் கருப்பொருளினுலே தம்மைக் காவியத்தின் தந்தையாக்கிக் கொண்டார். காவியத்தைப் பாடுவதிலும் அதன் கருப்பொருள் பெறுவதே கடினம்.

* * *

அண்ணனும் தம்பியுமாக இருவர் அறம் வளர்ப்போராய்க் காட்டில் வாழ்கிருர்கள். தம்பி அண்ணனறியாது அவ்வனத்திலே ஒரு கனியைக் கவர்ந்துவிட்டார். அக்கனியைப் பறித்தது குற்றம் என்று அண்ணன் கூறுகிருர். தம்பி அது குற்றமன்று என்று வாதிடுகிருர்; பின்னர் அரசன் முன்னிலையிலே நீதி கேட்க, ஏற்ற தண்டனைபெறச் செல்கிருர்; அரசனுக்கும் தம்பிக்குமிடையில் நீதிவாதம் நடைபெறுகிறது; தண்டனையைப் பெற்றுக் கரங்கள் துண்டிக்கப்படுகிருர்; அண்ணனிடம் வருகிருர். அண்ணன் முக மலர்ந்து ஆற்றிலே நீராடித் தருப்பணம் செய்யென்று கூறுகிருர். கரமற்றவர் பின்முன் யோசியாமலே ஆற்றிலே மூழ்கித் தருப்பணம் செய்யச் செல்கிருர். மூழ்கியெழுகையிற் கரங்களை மீண்டும் பெறுகிருர். இதுதான் இக்காவியத்தின் கருப்பொருள்.

* * *

கவிஞர் நாகராசனின் நாட்டுவளமும் சோலைவளமும் மெல்லெனச் செல்கிறது. அவர் கவிதை எளிமையும் மென்மையும் துலங்க நிற்கிறது. இவர் பாடல், அன்னத்தின் முதுகைத் தொடும்போது உண்டாகும் மென்மையுணர்ச்சியும், ஊர்ந்து செல்லும் அருவி மணலை அரிப்பதுபோல மனத்தைக் கரைக்கும் தன்மையும் ஒருங்கே கொண்டுள்ளது. கதிரேசர்பிள்ளையின் கவிதை, கதையின் புனிதத் தன்மையைக் காப்பாற்றி அண்ணனையும் அரசனையும் மேலுயர்த்தி நிற்கிறது. இவரது பாடல்கள் மல்லிகையின் மாலை வண்டு போலவும், மார்கழிமாதத்து மதிவின் நிறைவு போலவும் இன்னோசையும் நிறைவும் கொண்டன.

அம்பியின் அரசவை வழிக்காட்சி புதுமையுடன் பொலிகிறது. அரசன், தம்பி ஆகிய இருவரது வாதங்களும் அருமையாகப் பாடப்பட்டுள்ளன. இவரது பாடல் காலைத் தென்றல்போலப் புதுமை சொட்டித் திகழ்கிறது.

நா. ஆறுமுகம் தமிழ்த்தேனை வடிக்கிருர். சொற்றெரிவு, சொல்லிணைப்பு, இழுமெனு மோசை இவர் பாடலில் இழைந்து செல்கிறது. யாழ்போலக் குழைந்து குழைந்து மருட்டுகிறது.

வித்துவான் சி. ஆறுமுகத்தின் பொறுப்பு மிக உயர்ந்தது. அதை மிக ... ந்துள்ளார். இவரது கவி சங்க நாதம் ெ... கருப்பொருளின் நாததந்தி இவர் கவி...

... தர் க. சச்சிதானந்தன், பீ. ஏ.

279115

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org